விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 23 செவ்வாய்க்கிழமை (09.10.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 295

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இறுதிப் போரில் இருதரப்பும் நியாயங்களைப் புரியவில்லை

### எரிக் சொல்ஹெய்ம் வெளிப்படையாகப் பேச்சு

போரை ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் முடிக்காமல் கடைசிவரை போராட வேண்டும் என்று பிரபாகரன் உள்ளிட்ட விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைமை முடிவெடுத்தது மிகப் பெரிய வரலாற்றுத் தவறு. அதேசமயம் இதைக் காரணம்காட்டி இலங்கை அரசு நடத்திய குறி வைத்த தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது என்றும் மக்கள் செறிவாக வாழும் பகுதிகள் என்று தெரிந்தே இலங்கை அரசு தாக்குதல்களை நடத்தியது என அரசுக்கும் விடுதலைப் புலிகளும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னின்று நடத்தியவர்களில் ஒருவரான எரிக் சொல்ஹெய்ம் தற்போது வெளிப்படையாகப் பேசியுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங். இராணுவத்திற்கு சாதகமானது தீர்ப்பு

(புதுடில்லி)

இலங்கை இராணுவத்துக்கு இந்தியா பயிற்சி வழங்குவதற்கு தடை விதிக்க முடியாது என இந்திய உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இலங்கை இராணுவத்துக்கு இந்தியா பயிற்சியளிப்பதை தடை விதிக்க உத்தரவிட வேண்டும் எனக் கோரி வழக்குரைஞர் ராஜாராமன் தாக்கல் செய்த மனுவை கவனத்திற் கொண்ட உயர் நீதிமன்றம், (20ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் -மாவை கருத்து மோதல்!

(யாழ்ப்பாணம்)

ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட நேரத்துக்குள் கருத்துக்களை வெளிப்படுத்துங்கள். தவறும் பட்சத்தில் உங்கள் ஒலிவாங்கியை முடக்குவேன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எச்சரித்துள்ளார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் (20ஆம் பக்கம் பார்க்க)

## மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி கைது!



மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொகமட் நஷீத் நீதிமன்றத்திற்கு முன்னிலையாகாமை மற்றும் பயணத் தடையை மீறியமை காரணமாக நேற்று கைது செய்யப்பட்டுள்ளார். மாலைதீவுகளின் தெற்கே உள்ளதீவொன்றில் அவரை பொலிஸார் பிடித்துள்ளனர்.

தன் மீதான வழக்கு அரசியல் நோக்கம் கொண்டது என்றும் நீதியான விசாரணை நடக்காது என்றும் கூறியபடி, அவர் கடந்த வாரம் படகொன்றின் மூலம் (02ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டின் தேசிய பாதுகாப்பு காணிகளை அபகரிப்பதுதானா?

### கூட்டமைப்பு பகிரங்க கேள்வி

(யாழ்ப்பாணம்)

உயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகள் விடுவிக்கப்பட வேண்டும். மக்கள் அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். இராணுவத் தலையீடுகள் குறைக்கப்பட வேண்டும் என யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ். மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட வேண்டிய மக்களின் காணிகளை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும் என ஆளுநரிடம் வேண்டுகோள் விடுத்த கூட்டமைப்பு எம்.பி. அப்பாத்துரை விநாயகமூர்த்தியைத் தொடர்ந்து உரையாற்றிய எம்.பி.மாவை சேனாதிராஜா தெரிவிக்கையில்,

இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் அந்த மக்களின் காணிகளை ஆக்கிரமித்துள்ள இராணுவத்தினரின் தலையீடுகள் தொடர்பில் நாம் அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் வடக்கில் 24 கிராமசேவையாளர் பிரிவில் இன்னும் மக்கள் மீள்குடியேற் (20ஆம் பக்கம் பார்க்க)

## காணிகளை இராணுவம் அபகரிக்க முடியாது!

### - ஆளுநர் சந்திரசிறி

(யாழ்ப்பாணம்)

தனியார் காணிகளை இராணுவம் அபகரிக்க முடியாது என வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று மாவட்ட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் நல்லூர் பிரதேச சபைத் தவிசாளராலும் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டினையடுத்தே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான திருநெல்வேலி பாற்பண்ணைக்கு முன்பாகவுள்ள காணியை இராணுவத்தினர் அடாத்தாக கையகப்படுத்தியது (20ஆம் பக்கம் பார்க்க)



அமைச்சர் டக்ளஸுடன் காரசார விவாதத்தில் சுரேஷ் எம்.பி...

## இரா. தளபதியின் பேச்சுக்கு இந்தியாவில் கடும் எதிர்ப்பு

தமிழக அரசியல் தலைவர்களையும் தமிழ் உணர்வாளர்களையும், அலட்சியப்படுத்தி பேசிய இலங்கை இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியவை கண்டித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் அமைப்பினர் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் இலங்கை இராணுவத்துக்கு பயிற்சி அளிக்கக்கூடாது என்று தமிழக மக்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் மத்திய அரசுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இலங்கை இராணுவத் தளபதி ஜெயசூரிய, இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த 45 உயர் அதிகாரிகள் பயிற்சிக்காக இந்தியா செல்ல உள்ளனர். முடிந்தால் அவர்கள் தடுத்துக் கொள்ளட்டும் என்று அண்மையில் பேசியிருந்தார்.

இந்நிலையில், இவரது பேச்சை கண்டித்து தமிழ் அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் புதுச்சேரி காமராஜர் சிலை அருகே நேற்றுத் திரண்டனர். அவர்கள் ஜகத் ஜெயசூரியவைக் கண்டித்தும், இலங்கை [illegible]

## இந்தியா செல்லும் கூட்டமைப்பு ஓரணியாக ஒன்றுபட வேண்டும்

### உட்பூசல் வேண்டாம் என்கிறார் வினோ எம்.பி

இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் நிமித்தம் டில்லி செல்லும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் அல்லது கட்சித் தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்ளாமையானது மிகுந்த ஏமாற்றத்தையும் சந்தேகத்தையும் தோற்வித்துள்ளது

கூட்டமைப்பின் தலைவர்கள் [illegible]ாக ஓர் அணியாக [illegible] இந்தியா செல்லக்[illegible]து எனக் கேட்க விரும்புகிறேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

த.தே.கூவின் இந்திய விஜயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தனது ஆதங்கத்தையும், சந்தேகத்தையும் வெளியிட்டார்.

நாளை 10-ம திகதி (02ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்



உயர்திரு.

### வை. செல்வராஜா

| | | |
|---|---|---|
| வண்கல்வித் | திறத்திற்கோர் | வடமராட்சியென |
| மண்ணுலகு | போற்றிடவே | பணிபுரிந்த |
| பன்னரிய | புகழாளன் | பாங்குடைச் செம்மல் |
| தன்னரிய | சேவையினால் | எங்கள் கல்லூரி |
| தரணிதனில் | மேன்மையுற | வழிவகுத்தார் |
| மன்னுபுகழ் | சேவையினால் | மாண்புமிகு பண்பதனால் |
| மாகாணக் | கல்விப் பணிப்பாளராய் | உயர்ந்தார் |
| பொன்மனத்தோன் | சேவையது | சிறக்க வாழி! |
| பன்னரும் | பதவி பல பெற்று | வாழ்க! |

கல்லூரிச் சமூகம்
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

(C-1251)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

### திருமதி ரவிதயனி கருணானந்தன்



2012 ஆசிரியர் பிரதீபா பிரபா விருது பெறும் எமது கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியராகவும் தற்போது கிளி/முருகானந்த ஆரம்ப வித்தியாலய உப அதிபருமாகிய

திருமதி ரவிதயனி கருணானந்தன்

அவர்கள் இன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து "பிரதீபா பிரபா விருது" பெறுவதையிட்டு நாம் அகமகிழ்வதுடன் இவரது சேவை தொடர எமது கல்லூரிச் சமூகம் பாராட்டி வாழ்த்துகின்றது.

பாடசாலைச் சமூகம்
கிளி/முருகானந்த கல்லூரி
முரசுமோட்டை

(711)

## மாலைதீவு...

தலைநகரில் இருந்து தப்பிச் சென்றிருந்தார்.

மாலே நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட நடவடிக்கைக்கு தலைமை தாங்கி கொண்டிருந்த போதே அவர் கைதானதாக மாலைதீவு ஜனநாயகக் கட்சி பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நீதிபதியொருவரை, அந்த நாட்டின் நீதிக் கட்டமைப்புக்கு புறம்பாக கைது செய்யுமாறு பிடியாணை உத்தரவை முன்னாள் ஜனாதிபதி பிறப்பித்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## இந்தியா செல்...

இந்திய அரச பிரதிநிதிகளுடன் சந்திப்பை மேற்கொள்ளவுள்ள கூட்டமைப்பு தூதுக் குழுவில் 2 அல்லது 3 கட்சிகளின் பிரதிநிதிகளே செல்லவுள்ளதாக அறிகிறேன்.

5 கட்சிகள் கொண்ட கூட்டமைப்பில் ஏனைய கட்சிகளின் பிரதிநிதிகளுக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது ஏன் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (ந-11)


செல்லா சினிமா- யாழ்ப்பாணம்




"அன்பே சிவம். ஒன்றே குலம். ஒருவனே தேவன்."

ஸ்ரீவித்தியா குருகுலம்

வழங்கும், ஆசிரியர் முத்துலிங்கத்தின்

EASY ENGLISH

குருகுல மரபு: (i) கல்வி இலவசம்.
(ii) குரு, 'தந்தையும்' 'தாயும்' ஆனவர்.
(iii) விரும்புவோர் குருதட்சணை கொடுக்கலாம்.

விபரங்கள் + பெயர் பதிவு 773 212 711 மூலம்

(561)


## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலையிலிருந்து ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 168 புள்ளிகளைப் பெற்ற எமது மகள்

### செல்வி மிதிலா

அவர்களை வாழ்த்துவதோடு அவரை இந்நிலைக்கு உயர்த்திய ஆசிரியப் பெருந்தகைகளையும் பாராட்டி. இவர் இன்னும் பலசிறந்த தேர்ச்சிகளை எதிர்காலத்தில் பெற்று உயர வேண்டி இறைபாதம் தொழுகின்றோம்.

அன்புள்ள பெற்றோர்
அ. பாக்கியதாசன், அனுஷா
சகோதரர்கள், அப்பப்பா, அப்பம்மா, மாமா, மாமி, பெரியப்பா, பெரியம்மா, சித்தி, சித்தப்பா, மச்சான்மார்
அனைவரும் வாழ்த்துகிறோம்.

(708)

## மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகிறோம்



ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சாவகச்சேரி/மீசாலை மத்திய கல்லூரி மாணவியான

### சாய்பவன் (அசோக்) துலாஞ்சலி (துளசி)

172 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர் மென்மேலும் பல உயர் பெறுபேறுகளைப் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்தும்

அப்பா, அம்மா, தங்கை, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, அண்ணாமார், மாமா, அத்தை.

கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

(709)

## மனதார பாராட்டி வாழ்த்துகிறோம்

### திரு. கிட்டிணன் சிறீகாந்தராசா

கிளி/ கறுக்காய்த்தீவு மகா வித்தியாலய ஆசிரியர்



இன்று (09.10.2012) "பிரதீபா பிரபா விருது" பெறுவதையிட்டு மனதாரப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர் மேலும் பல விருதுகள் பெற வாழ்த்தி நிற்கின்றோம்.


அறிவாலயம்
இமையாணன்
உடுப்பிட்டி.

- குடும்பத்தினர்

(C-1248)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
1959 . 04 . 09



மறைவு
2012 . 09 . 11

கடந்த 11.09.2012 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவர்

### வாமதேவன் சவுந்தராஜன் (சந்திரன்)

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 09.10.2012 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வு 11.10.2012 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குடும்ப விளக்கு எம்மைவிட்டு பிரிந்த செய்தி கேட்டு உடன் வந்து உதவிகள் புரிந்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும், ஆறுதல் கூறி அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், உள்ளூர், வெளியூரிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், இறுதிக் கிரியைகள் நிகழ்வில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வ நன்றியை தெரிவிக்கின்றோம்.

இவ்வழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.


இங்ஙனம்
குடும்பத்தினர்

(595)

## வாழ்த்துகின்றோம்

2012ம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவன்

### செல்வன் வ. அருசாந் (164 புள்ளிகள்)



100 புள்ளிகளுக்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றோர்

1. சி. ரிஷிகேசன்
2. பா. மதுரா
3. செ. சாருஜா
4. ஸ்ரீ கேதுசா
5. ந. தாரணி
6. பா. விதுஷா
7. ர. ரக்ஷனா

பாடசாலை சமூகம்
யா/கம்பர்மலை வித்தியாலயம்,
கொம்மந்துறை, வல்வெட்டித்துறை.

(C-1247)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மூத்தோர் பெருமை

ஒரு ஊரிலே ராஜா ஒருவர் இருந்தார். அவருக்குப் பின் இளவரசன் பட்டத்துக்கு வந்தான்.

இந்த இளவரசனுக்கு ஒரு குணம்... அதாவது அவனுக்கு வயதானவர்களைக் கண்டால் பிடிக்காது.

இளைஞர்களின் வளர்ச்சிக்கு பெரியவர்கள் இடையூறாக இருக்கிறார்கள்– என்று அவன் நினைத்துக் கொண்டான்.

அதனால் அவன் பட்டத்துக்கு வந்ததும் உத்தரவிட்டான்.

"இந்தத் தேசத்திலே பெரியவர்கள் யாரும் இருக்கக்கூடாது. அவர்களை நாடு கடத்த வேண்டும். இந்த உத்தரவை மீறி யாராவது வயதானவர்களை வீட்டிலே வைத்திருந்தால், அவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை விதிக்கப்படும் என்று உத்தரவு பிறப்பித்தார்.

எல்லோரும் இந்த உத்தரவுக்குப் பயந்து அவர்களது அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி எல்லோரையும் வேறு தேசத்துக்கு அனுப்பி வைத்து விட்டார்கள்.

இளைஞர்களை மட்டும் வைத்துக் கொண்டு இவன் ஆட்சி நடத்திக் கொண்டிருந்தான்.

இப்படி இருந்த காலத்திலே அந்நிய நாட்டிலே இருந்து ஒரு வித்தைக்காரன் வந்தான்.

என்னோடு போட்டியிடக் கூடிய புத்திசாலிகள் யாராவது இந்தத் தேசத்திலே இருக்கிறார்களா? என சவால் விட்டான்.

இப்படியாக இவன் சவால் விட்டது அந்த இளவரசன் காதுக்கு எட்டியது.

உடனே இவனை அழைத்து "என்ன உன்னுடைய சவால்... அதைச் சொல்" என்றான் இளவரசன்.

"இளவரசரே! வேறு ஒன்றுமில்லை. சாம்பலைக் கயிறாக திரிக்க வேண்டும். இது ஒரு போட்டி. அதன்பின் இன்னொரு போட்டி இதோ இந்த சங்கிலே நூலைக் கோர்த்துத் தர வேண்டும்" என்றான்.

இரண்டுமே சாத்தியமில்லாத விடயம் என்பதை இளவரசன் உணர்ந்தான்.

இதுதான் இன்னொரு தேசத்திலே இருந்து வந்தவன் போட்ட சவால்.

இதைக்கேட்ட இளவரசனுக்கு அவமானமாகப் போய்விட்டது.

இவனுடைய சவாலை ஏற்றுக் கொள்வதற்கு இந்தத் தேசத்திலே இளைஞர்கள் யாருமே கிடையாதா? என்று கேட்டான். இதை ஊர் அறிய அறிவிக்குமாறு சொன்னான்.

ஒரேயொரு இளைஞன் மட்டும் வந்தான் "என்னால் முடியும்" என்றான்.

இளவரசனுக்கு ஆச்சரியம்...

"எங்கே சாம்பலைக் கயிறாகத் திரித்து கொண்டு வா பார்க்கலாம்" என்றான்.

இவன் சற்று இருங்கள் என்று சொல்லிவிட்டு அடுத்த அறைக்குப் போனான். சிறிது நேரத்தில் தட்டோடு ஓடி வந்தான். அந்தத் தட்டிலே... சாம்பலினால் திரிக்கப்பட்ட கயிறு! எல்லோருக்கும் ஆச்சரியம்.

சரி அடுத்தது சங்கிலே நூலைக் கோர்ப்பதா... சிறிது நேரம் பொறுங்கள் என்று கூறிவிட்டு சற்று நேரம் கழித்து திரும்பி வந்தான். அவன் கையிலே சங்கு. அதிலே ஒரு பக்கம் நூல் போய் இன்னொரு பக்கம் வெளியே வந்திருந்தது.

அந்நிய தேசத்தவனுக்கு வெட்கமாகப் போய் விட்டது. தோல்வியை ஒத்துக் கொண்டு திரும்பினான்.

இளவரசன் இந்த இளைஞனைப் பாராட்டி, பரிசு வழங்கினான்.

அதன்பின் மெதுவாகக் கேட்டான்; அது சரி... அது எப்படி சாம்பல் கயிறானது என்றான்.

ஒரு கயிறையெடுத்து தட்டத்தில் வைத்து கொளுத்தினேன். அது சாம்பலானது. அசையாமல் மெதுவாக எடுத்து வந்தேன்.

சங்கிலே நூலை நுழைத்தது எப்படி? என்றான்.

ஒரு எறும்பைப் பிடித்து அதன் உடம்பிலே ஒரு மெல்லிய நூலைக் கட்டினேன். சங்கிலே ஒரு பக்கமாகக் கட்டினேன். அடுத்த பக்க நுழைவாயிலில் சர்க்கரையை வைத்தேன். எறும்பு நூலை இழுத்துக் கொண்டு இந்தப் பக்கமாக வந்தடைந்தது என்றான்.

இந்தத் தந்திரம் உனக்கு எப்படித் தெரியும்? என்றான் அவன்.

இளவரசரே! மன்னித்துக் கொள்ளுங்கள். உங்களுக்குத் தெரியாமல் என்னுடைய தாத்தா, அப்பா, அம்மா ஆகியோரை வீட்டிலே மறைத்து வைத்திருக்கிறேன். அவர்கள் கூறித் தந்த யோசனைதான் இதுவென்றான்.

இளவரசனுக்கு தவறு புரிந்தது. நாடு கடத்திய பெரியவர்களையெல்லாம் உடனடியாக திருப்பி அழைத்து வந்தான். அவர்களது அனுபவ அறிவுக்கு மதிப்புக் கொடுக்க ஆரம்பித்தான்.

பெரியவர்களுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும்; அவர்களை அலட்சியப்படுத்தக்கூடாது. அவர்களது ஒவ்வொரு வார்த்தையும் பெறுமதியானவை என்பதை உணர்ந்து நடக்க வேண்டும். முக்கியமாக சிறியவர், பெரியவர்களின் சொற்படி நடப்பது சாலச் சிறந்தாகும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கூட்டறிக்கை கோரி ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கடும் வாக்குவாதம்

(யாழ்ப்பாணம்)

சென்ற கூட்ட அறிக்கை தரவில்லை எனத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி வாக்குவாதம் இடம்பெற்றது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெற்றது. இதன்போது சென்ற கூட்ட அறிக்கை ஏற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தினை கூட்டத்தின் தலைவர் வழங்கினார்.

இதன்போது கூட்டமைப்பின் தவிசாளர்கள் மற்றும் உப தவிசாளர்கள் தமக்கு சென்ற கூட்ட அறிக்கை வழங்கப்படவில்லை எனவும் நிகழ்ச்சி நிரல் கூட வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமக்கும் கூட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு சற்று முன்னர்தான் கூட்ட அறிக்கை வழங்கப்பட்டது எனத் தெரிவித்தனர்.

இதன்போது கூட்ட அறிக்கை பிரதேச சபை உறுப்பினர்களுக்கு வழங்க முடியாது என அமைச்சர் தெரிவித்தார்.

அதற்கு நாமும் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளே. எங்களுக்கும் கூட்ட அறிக்கை வழங்கப்பட வேண்டும் என கூறி கூட்டமைப்பு பிரதேச சபை தவிசாளர்கள் மற்றும் உபதவிசாளர்கள் தமது ஆசனங்களை விட்டு எழுந்து நின்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் ஈ.சரவணபவன், சி.சிறிதரன் ஆகியோர் கூட்டத்தின் தலைவருடனும் ஈ.பி.டி.பி. பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமாருடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறு நேற்றைய கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் தமக்குகூட்ட அறிக்கை வழங்கப்படாததற்கு எதிராக கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து கூட்ட அறிக்கை வழங்கப்பட்டாதது தவறு எனவும் எதிர்காலத்தில் இவ்வாறான தவறு நடக்காது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது தவறு என்று இங்கு மன்னிப்பு கேட்பதும் மன்னிப்பதுமல்ல பிரச்சினை வழங்கப்படாத கூட்ட அறிக்கையினை எவ்வாறு ஏற்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கேள்வி எழுப்பினார்.

இதன்போது விசேட கூட்டம் ஒன்றினை நடத்தி கூட்ட அறிக்கையினை நிறைவேற்றுவோம் என்றார் கூட்டத்தின் தலைவர். (அ–6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 40-50 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 60 | 45 | 70 |
| தக்காளி | 30 | 30 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 |
| கோவா | 60 | 60 | 70 |
| கரட் | 80 | 100 | 120 |
| பூசணி | 40 | 35 | 50 |
| புடோல் | 50 | -- | 50 |
| வாழைக்காய் | 40 | 25-30 | 50 |
| சின்ன வெங்காயம் | 70 | 40-60 | 80 |
| பெரிய வெங்காயம் | 50 | 50 | 60 |
| பாகற்காய் | 80 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | -- | 60 |
| பயற்றங்காய் | 50 | 40 | 70 |
| லீக்ஸ் | 120. | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 60 |
| கறிமிளகாய் | 90 | 80 | 110 |
| முருங்கைக்காய் | 20 | 30-40 | 40 |
| போஞ்சி | 120 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 100 | -- | -- |
| கீரை – 1 பிடி | 30 | 10-20 | 20 |
| தேசிக்காய் | 350 | 250 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 28-35 | 27-30 |

# இராசி பலன்

*09.10.2012*
*(புரட்டாதி 23, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.02 மணிக்கு*
*நவமி முன்னிரவு 11.18 மணிவரை*
*புநர்பூசம் முறபகல் 9.55 மணிவரை*
*இராகுகாலம் 3.02-4.32 மணிவரை*
*சுபநேரம் 10.32-12.02 மணிவரை*

**மேடம்** பெற்றோரின் ஆதரவால் பெருமை கூடும் நாள், உறவினர் வருகையுண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**இடபம்** தன்னம்பிக்கையோடு பணியாற்றி தடைகளை அகற்றுவீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், உடன் பிறப்புக்கள் உதவி செய்ய முன்வருவர்.

**மிதுனம்** வீட்டு தேவைகளைப் பூர்த்தி செய்முனைவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், அம்பிகை வழிபாடு ஆனந்தம் தரும்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், வைராக்கியத்தோடு செயற்பட்டு வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள், உடல் சீராகி உற்சாகப்படுத்தும்.

**சிங்கம்** மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், உறவினரைக் காண பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை ஏற்படும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி தரும்.

**கன்னி** வருங்கால நலன் கருதி புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், செல்வ நிலை உயரும் நாள், பயணங்களால் பலனுண்டு, குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகலாம்.

**துலாம்** தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும், ஆரோக்கியமான நாள்.

**விருச்சிகம்** தடைப்பட்ட காரியங்கள் இன்று நடைபெறலாம், மதிப்பும் மரியாதையும் உயரும், தொலைபேசி வழிமூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**தனுசு** பணி புரியுமிடத்தில் வேலைச்சுமை அதிகரிக்கலாம், கவலைகள் தீர கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படலாம்.

**மகரம்** நினைத்த காரியங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, அபூர்வ சந்திப்புண்டு, விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**கும்பம்** தன்னம்பிக்கை அதிகரிக்கும், தொழில் முன்னேற்றமுண்டு, ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மீனம்** ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், பிள்ளைகளின் கல்வி நலன் முக்கிய முடிவெடுப்பீர்கள், தொழில் வளர்ச்சி ஏற்படும், வருமானம் திருப்தி தரும்.


**வளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதிக்கப்படாத கடற்பரப்பிலும் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க வேண்டும்

## மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் மாவை சேனாதிராசா வலியுறுத்தல்





(யாழ்ப்பாணம்)

தடை செய்யப்பட்ட பிரதேச கடல் எல்லைக்குள் அந்தப் பிரதேசத்தை சாரர்தவர்கள் மீன்பிடிக்க அனுமதிக்கப்படும்போது ஏன் அந்தப் பிரதேச மீனவர்களை அனுமதிக்கக்கூடாது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெற்றது.

இதில் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் போதே மேற்கண்டவாறு அவர் கேள்வி எழுப்பினார். அங்கு அவர் இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் மீள்குடியேற்றப்படவில்லை. இராணுவம் மற்றும் கடற்படையினர் தொழில் நடவடிக்கையில் ஈடுபட அனுமதிக்கவில்லை எனக் கூறப்படும் கடல் பகுதிகளில் தென்னிலங்கையினைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் தடை செய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

தமிழ் மீனவர்கள் தொழில் செய்ய அதாவது பிரதேசத்தை சேர்ந்த மீனவர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட மறுக்கப்படும் கடல் பகுதியில் அந்தப் பிரதேசத்தை சாராதவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு கடற்படையினரும் இராணுவத்தினரும் அனுமதிக்கின்றனர்.

இதற்கு வேறு காரணம் கூறி பயன் இல்லை. தமிழ் மீனவர்கள் இடையூறு இன்றி தொழில் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். கடற்றொழில் நீரியல்வளத்துறை அமைச்சு தென்னிலங்கை மீனவர்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டு குடாநாட்டு மீனவர் களுக்கு அனுமதி மறுக்க முடியாது.

அத்தோடு தென்னிலங்கை மீனவர்கள் தடை செய்யப்பட்ட உபரகணங்களைப் பயன்படுத்தியே மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிவித்தார். இதன்போது யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரி ஒருவரினால் குடாநாட்டில் சில கடல் பிரதேசங்களில் கடந்த காலங்களில் இவ்வாறு தொழில் நடவடிக்கையில் தென்னிலங்கை மீனவர்கள் ஈடுபட்டு வந்தனர். ஆனால், தற்போது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

குறிப்பாக மீள்குடியேற்றப்பட முன்பு பருவகாலத்தில் வந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். ஆனால், தற்போது இல்லை என தெரிவித்தார். மேலும் பருத்தித்துறை தொடக்கம் கட்டைக்காடு வரையான கடல் பரப்பிற்குள் தென்னிலங்கை மீனவர்கள் ஊடுருவது இல்லை எனத் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தென்னிலங்கை மீனவர்கள் குறித்த கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவது உங்களுக்கு தெரியவில்லை என்றால் தெரியவில்லை எனக்கூறுங்கள். ஆனால், தென்னிலங்கை மீனவர்கள் குடாக் கடலில் மீன்பிடியில் ஈடுபடுவதை மறைக்க முற்படாதீர்கள்.

எமது மீனவர்கள் மீன்பிடிக்க தடை செய்யப்பட்டுள்ள பிரதேசத்தில் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அமைச்சின் அனுமதியுடன் வந்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு விட்டு செல்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் எமிலியாம் பிள்ளை கூறுகையில்,

யாழ்.மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு தென்னிலங்கை மீனவர்களினால் மட்டும் பிரச்சினை இல்லை. இந்திய மீனவர்களினாலும் பாரிய பிரச்சினை ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்திய மீனவர்களின் ரோலர் படகுகள் காரைநகர் தொடக்கம் முல்லைத்தீவு வரை தொழில் நடவடிக்கையில் ஈடுபடுகின்றன.

இதன்போது கூட்டமைப்பு எப்போது இந்தியா செல்கிறது என அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனை நோக்கியவாறு கேட்டார்.

மேலும் பாலைதீவு கடற்பகுதியில் பாஸ் நடைமுறையினால் தொழில் நடவடிக்கையினை மீனவர்கள் சுதந்திரமாக மேற்கொள்ள முடியவில்லை. இந்திய மீனவர்க ளின் ரோலர் படகுகளின் அத்துமீறல் குறித்து இந்தியப் பயணத்தின் போது மத்திய அரசாங்கத்துடன் பேசுவோம் எனத் தெரிவித்தார் மாவை சோனாதிராசா.

இதனையடுத்து இந்திய மீனவர்களின் அத்துமீறலை கட்டுப்படுத்த தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி அதனை நடைமுறைப்படுத்த இந்திய அரசாங்கத்திற்கு வலியுறுத்துவோம் எனத் தெரிவித்தார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

இதனையடுத்து இந்திய மீனவர் அத்துமீறலைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கக் கோரி எம்.பி.சிறிதரனால் கொண்டு வரப்பட்ட பிரேரணையை எம்.பி.சில்வேஸ்திரி அலென்ரின் வழி மொழிந்தார். இதனையடுத்து பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இதேவேளை, நடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துக்கூறியபோது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்ற உறுப்பினர், முன்னர் ஜனாதிபதி மீன்பிடி அமைச்சராக இருந்தபோது ஆலோசகராக இருந்தவர் என சிரித்தபடி கூறினார். இதனைக் கேட்ட அனைவரும் சிரித்தனர். (அ-6)

# மரண அறிவித்தல்

## பொன்னுத்துரை லட்சுமிப்பிள்ளை



வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை லட்சுமிப்பிள்ளை 08.10.2012 திங்கட்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், அன்னபூரணம், தங்கரத்தினம், கந்தையா, சுந்தரலிங்கம் (கனடா), ராசலிங்கம்(கனடா), சரோஜினிதேவி, ஜெகதேவி, காலஞ்சென்ற அன்னராணி மற்றும் பஞ்சலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 09.10.2012 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக ஊறனி இந்து மயானத்திற்கு (வல்வெட்டித்துறை) எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெகா மோட்டர்ஸ் குடும்பம்
வல்வெட்டி

இந்து பாடசாலை வீதி, வல்வெட்டி. (சி-1258)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முச்சக்கரவண்டி-டிப்பர் விபத்தில் சாரதி காயம்

(கனகபுரம்)

டிப்பர் வாகனத்துடன் முச்சக்கரவண்டி மோதிய விபத்தில் முச்சக்கரவண்டி சாரதி படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 3 மணிக்கு ஏ-9 வீதியில் உள்ள கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, பரந்தனில் இருந்து முறிகண்டி நோக்கி சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனம் ஒழுங்கை ஒன்றினுள் திரும்பியதனால் பின்னால் வந்த முச்சக்கரவண்டி டிப்பர் வாகனத்துடன் மோதியதிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் வட்டவளையை சேர்ந்த தங்கவேல் சுபாசேகர் (வயது 26) என்ற முச்சக்கரவண்டி சாரதியே படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-259)

## மதுராநகர் மற்றும் சேமமடுவுக்கு

# போக்குவரத்து வசதியை ஏற்படுத்த கோரிக்கை

(பூந்தோட்டம்)

வவுனியா மதுராநகர் மற்றும் சேமமடு கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகளை மேற்கொண்டு அப்பகுதி மக்களின் தேவையை பூர்த்தி செய்யுமாறு இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை முகமையாளரிடம் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வேண்டுகோளொன்றினை விடுத்துள்ளார்.

கல்நாட்டியகுளம் மதுராநகர் மற்றும் சேமமடு கிராமங்களுக்கு நீண்ட காலமாக போக்குவரத்து வசதிகள் இன்மையால் பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் உட்பட விவசாயிகளும் போக்குவரத்து வசதியின்மையால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வரும் நிலையில் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் முறையிட்டிருந்தனர்.

இதனையடுத்தே சிவசக்தி ஆனந்தன், பாராளுமன்ற உறுப்பினர் இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை முகாமையாளருடன் தொடர்பு கொண்டு இவ்வேண்டுகோளை விடுத்திருந்தார். இதனையடுத்து இவ் இரு கிராமங்களுக்கும் பேருந்து வசதியை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக சாலை முகாமையாளர் உறுதியளித்ததாகவும் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். (அ-9-266)

# பொறியியல் பீடங்களை அமைக்க 100 கோடியை குவைத் ஒதுக்கியது

## மானியங்கள் ஆணைக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழகங்களில் புதிதாக இரு பொறியியல் பீடங்களை ஸ்தாபிக்கவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய பொறியியல் பீடத்தை கிளிநொச்சியிலும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை அம்பாறையிலும் ஸ்தாபிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு மேலதிக மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு மேலதிகமாக அனுமதிக்கப்படும் மாணவர்களில் 200 பேர் புதிய பொறியியல் பீடங்களில் அனுமதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் புதிய பொறியியல் பீடத்தை அமைப்பதற்காக 100 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. அம்பாறையில் அமைக்கப்படவுள்ள பொறியியல் பீடத்திற்கு 100 கோடி ரூபா நிதியை குவைத் அரசாங்கம் வழங்கியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# இலங்கை அரசுக்கு எதிராக ஒரு கோடி கையெழுத்து

## ஆரம்பிக்கிறது கனேடிய தமிழர் தேசிய பேரவை

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது உயிரிழந்த தமிழர்களுக்காக நீதி வேண்டி இலங்கை அரசின் மீது பன்னாட்டு விசாரணை வேண்டியும் தங்கள் தாயக உரிமையை தீர்மானிக்க ஐ.நாவின் மேற்பார்வையில் பொது வாக்கெடுப்பு நடத்தவும் ஒரு கோடி கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு ஸ்காபரோ சிவிக் சென்டர் இல் இக்கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்படவுள்ளது என கனேடிய தமிழர் தேசிய அவை அறிவித்துள்ளது.

இக் கையெழுத்து வேட்டை எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு மொன்றியலில் நடைபெறும் எனவும் கனேடிய தமிழர் தேசிய அவை அறிவித்துள்ளது.

இக் கையெழுத்து வேட்டைக்கு அனைவரையும் வருகைதந்து இலங்கை அரசை குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி தமிழருக்கு ஒரு விடிவு கிடைக்க வேண்டி கையெழுத்து இடுமாறு கனேடிய தமிழர் தேசிய அவை கேட்டுள்ளது. (அ-2)

# இவ்வருடத்தில் இதுவரை 19 கொலைச்சம்பவங்கள்

## யாழ்.பிராந்திய பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா அறிக்கை

(யாழ்ப்பாணம்)

இந்த வருடத்தில் இதுவரை யாழ். மாவட்டத்தில் 19 கொலைச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக யாழ்.பிராந்திய பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட கேட்போர் கூடத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோரின் இணைத்தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு யாழ்.மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் கருத்தக்கூறும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் பாரிய குற்றச் செயல்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடத்தில் 21 கொலைச் சம்பவம் குடாநாட்டில் இடம்பெற்றுள்ளது. இந்த வருடத்தின் இதுவரை 19 கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாரிய குற்றச் செயல்கள் இடம் பெறுவதற்கு முக்கிய காரணமாக இரு சாரரிடையான கருத்து காரணமாக அமைந்துள்ளது. இந்த வருடத்தில் 65 பாரிய குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 32 பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அதில் 27 சிறுமியர்கள் 16 வயதுக்குட்பட்டவர்கள், 21 சிறுமியர்கள் காதல் விவகாரம் காரணமாக வீட்டை விட்டுவெளியேறியுள்ளனர். இருப்பினும் 16 வயதுக்குட்பட்டவர்கள் என்பதனால் அதனை சிறுமியர் பாலியல் துஷ்பிரயோகமாகவே நாம் கருத முடியும்.

மேலும் மூன்று சிறுமியர்கள் தமது உறவினர்களினால் பாலியல் துஷ்பிரயோகத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர வாள்வெட்டுச் சம்பவங்கள், திருட்டுச் சம்பவங்கள், கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இருப்பினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் பாரிய குற்றச் செயல்கள் அதிகளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## கூட்டெரு தயாரித்தல் செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஆரம்பக்கல்வி பாடசாலை ஆசிரியர்கள், தரம் 5 மாணவர்கள் ஆகியோருக்கான சுகாதார மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கூட்டெரு தயாரித்தல் செயலமர்வு நாளை புதன்கிழமை காலை 8.30 மணிக்கு மாங்குளம் கணனி வள நிலையத்தில் நடைபெறவுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (அ-3-15)


மணமகள் தேவை — கல்யாண மாலை — மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூரட்டாதி 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-06<br>தொழில்:-Bsc P.L.C (விவசாய உத்தியோகத்தர் (தனியார்) B/556 | பிறப்பு:- 1982 இந்து செங்குந்தர்<br>நட்சத்திரம்:- சித்திரை<br>உயரம்: 5'6'<br>கி.பா:-49<br>தொழில்:-அரச வங்கி உத்தியோகத்தர் G/212 |
| பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-திருவாதிரை 2<br>உயரம்:-5'5"<br>கி.பா:-16.25<br>தொழில்:-B.A (Hons) AC & I.Business U.K P.R B/060 | பிறப்பு:- 1983 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- அனுசம் 3<br>உயரம்: 5'4"<br>கி.பா:-44.5, 7 இல் செவ்<br>தொழில்:-அரச திட்டமிடல் உதவியாளர் G/213 |
| பிறப்பு:- 1970 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-சதயம் 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-36.75, 1 இல் செவ்<br>தொழில்:-சுவீடன் (P.R) B/560 | பிறப்பு:- 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- பூரம் 3<br>உயரம்: 5'3"<br>கி.பா:- 82.5, 7இல் செவ்<br>தொழில்:- High National Dip. G/217 |
| பிறப்பு:- 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மூலம் 4<br>உயரம்:-5'6"<br>கி.பா:-43.5, 12 இல் செவ்வாய்<br>தொழில்:-Bsc U.K. work permit B/561 | பிறப்பு:- 1977 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- உத்தரட்டாதி 2<br>உயரம்: 5'3"<br>கி.பா:-19<br>தொழில்:-சித்த மருத்துவ வைத்திய கலாநிதி G/218 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஞ்சுள மீதான தாக்குதலுக்கு சர்வதேச சூழ்ச்சியே காரணம்

## தாக்குதலையும் கண்டிக்கிறோம் என்கிறார் அமைச்சர் எஸ்.பி.

(கொழும்பு)

**நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் தாக்கப்பட்டதன் பின்னணியில் செயற்பட்ட தேசிய மற்றும் சூழ்ச்சியாளர்கள் இருப்பதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸா நாயக்க தெரிவித்துள்ளார். நிதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதல் குறித்து கருத்து வெளியிடும்போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,**

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் நீதித்துறையில் தலையிட வேண்டாம் எனக் கூறி அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையிலான ஜனாதிபதி அரசாங்கம் என நாம் அனைவரும் அதிருப்தியடைந்தோம். நீதித்துறையில் தலையிட தயாரில்லை என ஜனாதிபதி தெரிவித்தார்.

தான் ஒரு சட்டத்தரணி என்ற வகையில் நீதிமன்றத்தின் சுதந்திரத்தையும் உயர்வையும் கௌரவத்தையும் பாதுகாப்பதாக ஜனாதிபதி கூறினார். நீதித்துறையுடன் எந்தப் பிரச்சினையையும் ஏற்படுத்திக் கொள்ளத் தயார் இல்லை என அவர் குறிப்பிட்டார். இதனால் அரசாங்கத்திற்கு பெரும் பிரச்சினை ஏற்படும் என எதிர்பார்த்தவர்களுக்கு எதனையும் செய்து கொள்ள முடியாது அவர்கள் மௌனமாகினர்.

இந்த நிலையில் ஆணைக்குழுவின் செயலாளர் மீது தாக்குதல் நடத்தி அதனை அரசாங்கத்தின் பக்கம் திசைதிருப்பப் பார்த்துள்ளனர். மஞ்சுள திலகரட்ன மீது தாக்குதல் நடத்திய செயற்பட்டுள்ள சூழ்ச்சியை பாரதூரமான செயற்பாடாக அரசாங்கம் காண்டிக்கிறது.

விரிவுரையாளர்களின் பின்னணியில் அரசசார்பற்ற நிறுவனங்கள் இருந்தன. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி இலங்கையில் நடைபெற்று வரும் சந்தர்ப்பத்தில் முழு உலகத்தின் கண்களும் இலங்கை மீதே இருந்தன. ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக்கூட்டம் நடைபெற்று வருகிறது. அதில் இலங்கைக்கு எதிராக யோசனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கிடையில் இலங்கையின் நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த அனைத்து சம்பவங்களின் பின்னணியிலும் திட்டமிட்ட தேசிய மற்றும் சர்வதேச சூழ்ச்சிகள் இருக்கின்றன.

எவ்வாறாயினும் இந்த தாக்குதலை அரசாங்கம் வன்மையாக கண்டிக்கிறது. இது குறித்து உடனடியாக விசாரணை நடத்தி சூழ்ச்சியாளர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

## குருதிக்கொடை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

எச். என்.பி. அச்சுவேலிக் கிளையின் முதலாம் ஆண்டுநிறைவை முன்னிட்டு நாளை புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் மதியம் வரை குருதிக் கொடை நிகழ்வு எச்.என்.பி. அச்சுவேலி வாடிக்கையாளர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாடிக்கையாளர்கள் , வங்கி ஊழியர்கள் மற்றும் இரத்ததானம் செய்ய விரும்பும் குருதிக்கொடையாளிகள் ஆகியோர் அன்றைய தினம் எச்.என்.பி. அச்சுவேலி கிளைக்கு வருகை தந்து உயிர் காக்கும் உன்னத பணியில் இணைந்து கொள்ளுமாறு எச். என்.பி. சமூகம் அறிவித் துள்ளது. (அ-9)

## கைவினை கண்காட்சி

யாழ்ப்பாணம் நல்லூர் இல. 75 அம்மன் வீதியில் அமைந்துள்ள (JOKI'S ) அழகுக் கலை பயிற்சி நிலையத்தில் கேக் ஐசிங் கைவினைக் கண்காட்சி நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவுள்ளது. பெற்றா எசென்ஸ் விநியோகஸ்தர்களின் அனுசரணையுடன் நடைபெறும் இக்கண்காட்சியினை பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ள யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் நாடாவெட்டி ஆரம்பித்து வைக்கவுள்ளார். (அ-9)

## வவுனியாக்குளம் துப்புரவு செய்யப்படுகிறது

(பூந்தோட்டம்)

வவுனியா குளத்தில் வர்த்தகர்களும் பொது மக்களும் குப்பைகளை கொட்டி அசுத்தப்படுத்தி வருவதனால் சுற்றாடல் பொலிஸாரும் நீர்ப்பாசன திணைக்களமும் இணைந்து துப்புரவு செய்யும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

குளத்தின் ஒருபகுதியில் இருக்கும் வர்த்தக கட்டடங்களால் விறகுகள் மற்றும் கழிவுப் பொருட்கள் குளத்தினுள் இடப்பட்டு வருவதுடன் பொதுமக்களும் வீட்டுக்கழிவுப் பொருட்களை வீசி வந்திருந்தனர். இந்நிலையில் பலருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தண்டம் அறவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் குளத்தினை துப்புரவு செய்து சுற்றாடல் பொலிஸாரின் கீழ் கண்காணிக்க நீர்ப்பாசன திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டதனைஅடுத்து நேற்றுமுன்தினம் குளத்தினை துப்புரவு செய்யும் பணி நீர்ப்பாசன பொறியியலாளரின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (அ-9-266)

# நீதிமன்றங்கள் நீதி கோரி நேற்று பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நாடளாவிய ரீதியிலுள்ள சகல நீதிமன்ற நீதிபதிகளும் நேற்று முதல் தமது சேவையில் இடைவிலகியுள்ளனர்.

நாட்டின் பல பாகங்களில் எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம்பெற்ற நிலையில் கல்முனை நீதிமன்ற கட்டடப்பகுதிக்கு முன்பாக சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

கொழும்பு பொதுப்படை நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு முன்பாக இதேபோன்று பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது. இதில் அரசியல் கட்சி பிரதிநிதிகளும் பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டதாகக் கூறப்படுகின்றது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது தாக்குதல் சம்பவத்திற்கு எதிர்ப்பு வெளியிட்டதுடன் சவப்பெட்டி ஒன்றுக்கும் தீயிட்டுள்ளனர். இதனிடையே நாடளாவிய ரீதியாக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மேல்நீதிமன்றில் நேற்று இடம்பெறவிருந்த சில வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, நீதிவான் நீதிமன்ற வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத்திணைக்களத்தின் கீழ் இயங்கும் சில வைத்தியசாலைகளில் தாதியர் பற்றாக்குறை நிலவுவதால் வைத்தியசாலைகளில் பணியாற்றுவதற்காக 65 வயதுக்குட்பட்ட ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிமனை பிராந்தியப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

பணியாற்ற விருப்பமுடையோர் அமைச்சரவையின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக உடனடியாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை யாழ்ப்பாணத்துடன் தொடர்புகொண்டு விபரங்களை சமர்ப்பிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (9)


## சூரிபுரம் மக்களுக்கு குடிநீர்க்கிணறுகள்

(பூந்தோட்டம்)

சூரிபுரத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ள கேப்பாபிலவு மக்களுக்கு குடிதண்ணீரை பெற்றுக்கொள்வதற்காக கிணறுகளை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 120 குடும்பங்களைச் சேர்ந்த மக்களும் குடிநீருக்கு பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கிய நிலையில் இது தொடர்பில் பல தரப்பாலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டதை அடுத்தே கிணறுகளை அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்த அப்பகுதி மக்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த நீர்த்தாங்கிகளிலும் குடிநீர் பெறக்கூடிய விதத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை, குழாய்க்கிணறுகளும் அமைக்கப்பட்டு வருவதுடன் நிவாரணப் பொருட்களை பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்களும் தமக்கு வழங்கி வருவதாகவும் தெரிவித்தனர். (அ-9-266)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி தெற்கை ச் சேர்ந்த நடராசா பஞ்சசீலன் அண் மையில் நீதி மற்றும் மறுசீரமைப்பு அமைச்சினால், யாழ் மாவட்ட சமாதான நீதிவானாக நிமிக்கப் பட்டுள்ளார்.

இவர் புத்தூர் [illegible]ஸ்கந்தாக் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பட்டதாரியும் முல்லைத்தீவு தேராங்கண்டல் அரசினர் தமிழக் கலவன் பாடசாலையின் ஆசிரியருமாவார். (அ)



கொக்குவில் வளர்மதி முன்பள்ளியின் சிறுவர்தின விழாவும் ஆசிரியர்தின விழாவும் கடந்த 6 ஆம் திகதி-வேலாயுதம்பிள்ளை அரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அசிரியர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் சிறார்களின் இசை நிகழ்வையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என். குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையிரத புனரமைப்பிற்கு 800 மில்லியன் டொலர் கடன்

## இந்தியா வழங்கியுள்ளது

மதவாச்சி- யாழ்ப்பாணம்- காங்கேசன்துறை இடையே 252.5 கி.மீ தொலைவில் அமைந்துள்ள மிக நீளமான புகையிரத பாதை போரினால் அழிவடைந்து விட்டது.

இப்போது தமிழர் பகுதிகளில் புனரமைப்பு பணிகள் இந்திய நிதியுதவியுடன் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் 252.5 கிலோ மீற்றர் நீள புகையிரத பாதையை மீண்டும் புனரமைக்க இந்தியா நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த புனரமைப்பு திட்டத்துக்காக இந்தியா 800 மில்லியன் டொலர் (சுமார் 4 ஆயிரம் கோடி) செலவு செய்கிறது. ஏற்கனவே செய்து கொண்ட உடன்படிக்கையின் படி கடனாக இந்த தொகை வழங்கப்படுகிறது.

இந்திய அரசு நிறுவனமான இர்கான் இந்த புகையிரதப் பாதையை புனரமைக்கும் பணியில் ஈடுபடவுள்ளது. அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதம் இந்த பணிகள் முடிவடையும் என தகவல்கள் கூறுகின்றன.

இது தொடர்பாக இலங்கையில் இர்கான் செயற்பாடுகளை கவனிக்கும் பொறுப்பாளர் எஸ்.எல்.குப்தா குறிப்பிடுகையில், 252.5 நீள ரயில் பாதை திட்டம் 4 கட்டங்களாக செயற்படுத்தப்படுகிறது.

முதல் கட்டமாக மதவாச்சி- மதுசாலை வரையிலான பணிகள் அடுத்த செப்டெம்பரில் நிறைவு அடையும். அதைத் தொடர்ந்து மதுசாலை- தலைமன்னார் பணிகள், ஓமந்தை- பால்லாய் அடுத்த செப்டெம்பரில் நிறைவடையும். இறுதிக்கட்டமாக பால்லாய்- காங்கேசன்துறை பணிகள் அடுத்த டிசம்பரில் முடியும் என்றார். (அ-2)

# ஜனாதிபதி 13 ஆம் திகதி குவைத் பயணம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 13 ஆம் திகதி குவைத் நாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

நான்கு நாட்கள் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளும் அவர் எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆசிய கோப்ரேட் டயலொக் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே குவைத் செல்லவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது குவைத்தின் அரச தலைவர்களுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

ஆசிய கோப்ரேட் டயலொக்கின் மாநாடு கடந்த 2009 ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்றதுடன் சுமார் ஒன்றரை வருடங்கள் இந்த அமைப்பின் தலைவராக அவர் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மஞ்சுள மீதான தாக்குதல் வெட்கம் கெட்ட செயலே!

## அரசை சாடுகிறது ஜே.வி.பி.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மஞ்சுள திலகரட்ன மீது யார் தாக்குதல் நடத்தினார்கள் என்பது இரகசியமல்ல என ஜே.வி.பி. கட்சி தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலின் மூலம் அரசாங்கத்தின் வெட்கம் கெட்ட நிலைமையே வெளிப்படுகின்றது. நீதிமன்றக் கட்டமைப்பு தமது சேவைகளை சுயாதீனமான முறையில் மேற்கொள்ள இந்த அரசாங்கமே தடை ஏற்படுத்தி வருகின்றது.

முன்னாள் மாவட்ட நீதவானான மஞ்சுள திலகரட்ன நீதிமன்றின் சுயாதீனத்தன்மையை உறுதி செய்யும் நோக்கில் அண்மையில் சர்ச்சைக்குரிய ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இதன்மூலம் நீதிமன்றக் கட்டமைப்பு எதிர்நோக்கி வரும் அழுத்தங்கள் மக்களுக்கு அம்பலப்படுத்தப்பட்டது. உயிர் அச்சுறுத்தலை எதிர்நோக்கியிருந்த மஞ்சுள திலகரட்ன மீதான தாக்குதலை சாதாரணமாக விட்டுவிட முடியாது.

இந்தத் தாக்குதலை நடத்த வந்த குண்டர்களுக்குக் கூட தனிப்பட்ட ரீதியில் மஞ்சுள திலகரட்னவுடன் பிணக்கு எதுவும் இருந்திருக்காது என ஜே.வி.பி. வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (அ-2)

# மலேசிய தமிழர் பேரவை மீது இலங்கை அரசு சந்தேகிக்கிறது

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவுவதற்காக மலேசிய அரசாங்கம் மலேசியாவின் தமிழர் பேரவைக்கு நிதி வழங்கியமை குறித்து இலங்கை அரசாங்கம் விளக்கங்களை எதிர்பார்ப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலேசிய தமிழர் பேரவை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொண்ட அமைப்பு என்பதுடன் உலக தமிழர் பேரவையுடன் தொடர்புடைய அமைப்பு என்று இலங்கை அரசாங்கம் கருதுகின்றது.

இந்த நிலையில் அந்த அமைப்புக்கு மலேசிய அரசாங்கம் நிதியுதவி செய்தமை குறித்து இலங்கை அரசாங்கம் கேள்வி எழுப்பியுள்ளது.

போரின் போது கணவர்மாரை இழந்த தமிழ்ப் பெண்களின் நலன்களை கருத்திற்கொண்டு மலேசிய அரசாங்கம் மலேசிய தமிழர் பேரவைக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

எனினும் இந்த நிதியை கொண்டு போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் தமிழ்ப் பெண்களுக்கு உதவுவதன் மூலம் ஆயிரத்து 700 குடும்பங்களின் வாழ்வாதார பிரச்சினைக்கு வழியேற்படுத்த முடியும் என்று மலேசிய தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# 2012.10 09 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★1003-லெயிஃப் எரிக்சன் கனடாவில் லான்ஸ் ஒக்ஸ் மெடோஸ் என்ற இடத்தில் தரையிறங்கி அமெரிக்காவில் காலடி வைத்த முதலாவது ஐரோப்பியர் ஆனார்.

★1582-கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல்,ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ்வாண்டின் இந் நாள் இடம்பெறவில்லை.

★1604-சுப்பர்நோவா 1604 பால் வெளியில் கண்டுபிடிக்கப்பட்டது.

★1760-ஏழாண்டுப் போர்: ரஷ்யா பேர்லின் நகரைப் பிடித்தது.

★1771-டச்சு சரக்குக் கப்பல் பின்லாந்துக் கரையில் மூழ்கியது.

★1799-லூட்டின் என்ற கப்பல் நெதர்லாந்தில் 240 பேருடனும் £ 1 200 000 பெறுமதியான பொருட்களுடனும் மூழ்கியது.

★1804-டாஸ்மானியா தலைநகர் ஹோபார்ட் நகரம் அமைக்கப்பட்டது.

★1806- பிரஷ்யா பிரான்ஸ் மீது போர் தொடுத்தது.

★1820-கயாக்கில் ஸ்பெயினிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★1831-கிரேக்கத் தலைவர் இயோனிஸ் கப்பொடீஸ்ட்றியா படுகொலை செய்யப்பட்டார்.

★1835-கொழும்பு றோயல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

★1854-ரஷ்யாவில் செவஸ்தபோல் மீதான தாக்குதலை பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் துருக்கியப் படைகள் ஆரம்பித்தன.

★1871-மூன்று நாட்களுக்கு முன்னர் சிக்காகோவில் பரவிய பெரும் தீ அணைக்கப்பட்டது. நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்தனர்.

★1888-வோஷிங்டன் நினைவுச் சின்னம், அக்காலத்தில் உலகின் உயரமான கட்டடம் வோஷிங்டன் டிசியில் பொதுமக்கள் பார்வைக்குத் திறக்கப்பட்டது.

★1910-மாறுவேடத்தில் உலகப் பயணம் மேற்கொண்ட பின்னர் வ.வே. சு.ஐயர் புதுச்சேரி திரும்பினார்.

★1914-முதலாம் உலகப் போர்: பெல்ஜியத்தின் ஆண்ட்வேர்ப் நகரம் ஜேர்மனியிடம் வீழ்ந்தது.

★1934-யூகோஸ்லாவியாவின் மன்னன் முதலாம் அலெக்சாண்டர் உயிரிழந்தான்.

★1941-பனாமாவில் இடம்பெற்ற புரட்சியின் பின்னர் ரிக்கார்டோ டெலா கார்டியா ஜனாதிபதியானார்.

★1962-உகாண்டா பிரித்தானியாவிடம் இருந்து விடுதலை பெற்றது.

★1963-வட கிழக்கு இத்தாலியில் இடம்பெற்ற நிலச்சரிவில் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

★1967-சே குவேரா பொலிவியாவில் கைது செய்யப்பட்ட அடுத்த நாள் புரட்சியைத் தூண்டினார் என்ற குற்றச்சாட்டில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★1970-கம்போடியாவில் கெமர் குடியரசு அறிவிக்கப்பட்டது.

★1981-பிரான்சில் மரண தண்டனை நிறுத்தப்பட்டது.

★1983-ரங்கூனில் தென்கொரிய ஜனாதிபதி சுன் டு-ஹூவான் மீது இடம் பெற்ற குண்டுத் தாக்குதலில் அவர் உயிர் தப்பினார். நான்கு அமைச்சர்கள் உட்பட பலர் உயிரிழந்தனர்.

★1989-ரஷ்யாவின் வரோனியொஷ் அருகில் ஒரு பறக்கும் தட்டு இறங்கியதாக சோவியத் ஒன்றிய செய்தித் தாபனம் அறிவித்தது.

★2001-இந்தியாவில் பாவேந்தர் பாரதிதாசனுக்கு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

★2004-ஆப்கானிஸ்தானில் முதற் தடவையாக ஜனநாயகத் தேர்தல் இடம்பெற்றது.

★2006-வட கொரியா தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை வெற்றிகரமாக நிகழ்த்தியது.

### பிறப்புக்கள்

★1897-எம்.பக்தவத்சலம், தமிழ் நாட்டின் முன்னாள் முதலமைச்சர் (இ.1987)

★1924-இம்மானுவேல் சேகரன், தலித் மக்களின் உரிமைகளுக்காக போராடிய ஒரு தலைவர் (இ.1957)

★**1940-ஜான் லெனன், ஆங்கிலப் பாடகர், இசையமைப்பாளர் (இ.1980)**

★1945-விஜய குமாரணதுங்க, இலங்கையின் சிங்கள திரைப்பட நடிகர், அரசியல்வாதி (இ.1988)

★1968-அன்புமணி ராமதாஸ், தமிழக அரசியல்வாதி.

### இறப்புகள்


★1943-பீட்டர் சீமன், டச்சு இயற்பியலாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி.1865)

★1967-சே குவேரா, ஆர்ஜென்டீனிய கெரில்லாத் தலைவர் (பி.1928)

### சிறப்பு நாள்

★உலக அஞ்சல் தினம்.

**ஜான் லெனன்**



ஜான் வின்ஸ்டன் ஓனோலெனன் ஆங்கில பாடலாசிரியர், பாடகர், இசையமைப்பாளர், எழுத்தாளர், அமைதி பாங்கேற்பாளர் ஆவார்.

இவர் உலகப் புகழ்பெற்ற த பீட்டல்ஸ் இசைக் குழுவை உருவாக்கியவர்களில் ஒருவர் ஆவார். இவரும் பீட்டில்ஸ் குழுவின் இன்னொரு உறுப்பினருமான பௌல் மக்கார்ட்டினியும் சேர்ந்து எழுதி இசையமைத்த பாடல்கள் உலகப்புகழ் பெற்றவை. குறிப்பாக கற்பனை செய், அமைதிக்கு ஒரு வாய்ப்பைக் கொடுங்கள் பாடல்கள் இன்றுவரை உலக அமைதிக்கான போராட்டங்களில் முக்கிய இடம் பெற்றிருக்கும் பாடல்கள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பிரதீபா பிரபா விருது வழங்கும் நிகழ்வு இன்று

(மல்லாவி)

மஹிந்த சிந்தனை தேசிய புனர்வாழ்வு செயற்றிட்டத்திற்கு ஏற்ப ஆசிரியர் பிரதீபா பிரபா விருது வழங்கப்படும் விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நீபே கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.எம்.கோத்தபய ஜயரத்ன அறிவித்துள்ளார்.

இவ் விழாவிற்கு சமூகம் கொடுக்கவுள்ள அதிபர் ஆசிரியர் தேசிய உடை அல்லது ஐரோப்பிய ஆடையும் ஆசிரியைகள் சேலையும் அணிந்து கலந்து கொள்ள வேண்டும்.

அத்துடன் அழைப்பு கடிதத்துடன் தேசிய ஆள் அடையாள அட்டை கொண்டு வருவதுடன் கமரா, கையடக்கத்தொலைபேசி, மின் உபகரணங்கள், பிரயாண பொதிகள், பெண்களின் கைப்பைகள், குடை, கத்தரிக்கோல், கத்தி, கண்ணாடிப் பொருட்கள் போன்ற எவற்றையும் கொண்டு வருவதற்கு தடை செய்யப்பட்டுள்ளதாகவும் விழா தொடர்பான மேலதிக விபரங்கள் தேவைப்படுவோர் 011 2784845 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

மஹிந்த சிந்தனை தேசிய புனர் வாழ்வு செயற்றிட்டத்திற்கு ஏற்ப எதிர்கால சவால்களை எதிர்கொள் எக்ஷடிய மாணவர்பரம்பரை ஒன்றை இலங்கையில் உருவாக்கும் முகமாக உயிர்ப்பான வகுப்பறை ஒன்றை நிர்மாணித்து அதனுள் மிகப் பயன் மிக்க கற்றல் கற்பித்தல் செயற்பா ட்டை முன்னெடுக்கும் ஆசிரியர் கள், அதிபர்களால் ஆற்றப்படுகின்ற அளவிலான சேவையினை கௌரவித்து இந்த உயர் விருது கடந்த வருடம் முதல் வழங்கப்பட்டு வருகின்றது. (அ-3-15)



அங்கர் நியூடேல் உற்பத்தி தொழிற்சாலைக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நேற்று முன்தினம் விஜயமொன்றை மேற்கொண்டார். இதன்போது பியகம பிரதேச ஞாயிறு பாடசாலை மாணவர்களுக்கு இலவச பால் விநியோகத்தில் அமைச்சர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

# பௌத்தர் மீது தாக்குதல்; கடுமையான தண்டனை

பௌத்த விகாரைகள் மற்றும் பௌத்தர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும் என பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த மக்களை மட்டுமன்றி மிக நீண்ட வரலாற்றை உடைய பௌத்த விகாரைகள் மீதும் கண்மூடித்தனமான தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவங்கள் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தாக்குதலுக்கு இலக்கான விகாரைகளை புனரமைப்பதற்கு அனைத்து உதவிகளையும் அரசாங்கம் வழங்கும்.

தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் சம்பவத்தின் பின்னணி குறித்து கண்டறியப்பட்டுள்ளது என்றார். (அ-2)

# நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யா/மத்திய கல்லூரி அதிபர் அமரர் இரா சதுரையின் நினைவுப் பேருரை எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தம்பர் மண்டபத்தில் யாழ். மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் நினைவுப் பேருரையை **எம்மை நாமே செதுக்குவோம்** என்ற தலைப்பில் சொல்லின் செல்வர் தேசமானி இரா. செல்வவடிவேல் ஆற்றவுள்ளார். கவிதாஞ்சலியை பழைய மாணவன் த.தயாபரன் **ஆளுமையின் வழிகாட்டி** எனும் தலைப்பில் ஆற்றவுள்ளார்.

நினைவஞ்சலியை பழைய மாணவர் சங்கத் தலைவர் ந.இராஜதேவன், ஆசிரியர் வட்டத் தலைவர் வீ.தயாளன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ)

# துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து ஆறு பேருக்கு பிரதீபா பிரபா விருது

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்தில் இருந்து இன்று கொழும்பில் நடைபெறும் ஆசிரியர் பிரதீபா பிரபா விருதுபெறும் நிகழ்விற்கு மூன்று பாடசாலை அதிபர்களும் மூன்று ஆசிரியர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை அதிபர் குமரேசன் பஞ்சலிங்கம் (வகை 301-1000), மு/ஆறுமுகம் வித்தியாலய அதிபர் இரத்தினசிங்கம் பாஸ்கரன் (வகை 1-200), மு/தண்டுவான் அ.த.க.பாடசாலை அதிபர் விநாயகமூர்த்தி பன்னீர்ச்செல்வன் (வகை 201-300), மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க. பாடசாலை ஆசிரியை திருமதி இராசகுமாரி கனகசூரியன் (வகை 301-1000), மு/ஐயங்கன்குளம் அ.த.க.பாடசாலை ஆசிரியர் கணபதிப்பிள்ளை சந்திரலிங்கம் (வகை 201-300), மு/மாங்குளம் மகா வித்தியாலய ஆசிரியை செல்வி திருநாவுக்கரசு வினோதினி (வகை 301-1000) ஆகியோரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-3-15)

# காணாமல் போன இளைஞன் தலை துண்டிக்கப்பட்ட நிலையில்

## ஹிந்தட்டிய பகுதியில் பரபரப்பு

(கொழும்பு)

மாத்தறை, ஹிந்தட்டிய பிரதேசத்தில் தலை மற்றும் கைகள் இரண்டும் வெட்டி துண்டிக்கப்பட்ட நிலையில் ஒருவரது சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட சடலம் 26 வயதுடைய இளைஞர் ஒருவரது என மாத்தறை பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த இளைஞர் கடந்த ஆறாம் திகதியிலிருந்து காணாமற்போயுள்ளதாக அவரது தாயாரால் மாத்தறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, களுத்துறை வடக்கு களுகங்கையில் மிதந்த பெண் ஒருவரது சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இவர் 40 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது சடலம் நாகொடை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# முல்லைத்தீவில் விமான எதிர்ப்பு ஆயுதங்கள் மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வெள்ள முள்ளிவாய்க்கால் பகுதியிலிருந்து பொலிஸ் அதிரடிப் படையினர் ஒரு தொகுதி ஆயுதங்களை கைப்பற்றியுள்ளனர். பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறிப்பிட்ட இடத்துக்கு சென்ற அதிரடிப்படையினர் குறித்த ஆயுதங்களை மீட்டுள்ளனர்.

விமானத்தை தாக்கும் ஆயுதம் ஒன்றும் மற்றும் ரி 56 ரக துப்பாக்கி ரவைகள் ஆயிரத்து 563, விமான எதிர்ப்பு குண்டுகள் 160 மற்றும் பல்வேறு துப்பாக்கிகளும் பயன்படுத்தப்படும் குண்டுகள் ஆயிரத்து 300 என்பன மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாயுதங்கள் நிலத்தின் கீழ் புதைக்கப்பட்ட நிலையிலிருந்து மீட்டுள்ள போதிலும் இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எவரும் கைது செய்யப்படவில்லையெனவும் யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கூட்டமைப்பு நாடு திரும்பியவுடன் தெரிவுக்குழுவில் இணையுமாம்

## திஸ்ஸ விதாரண நம்பிக்கை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தியாவில் இருந்து நாடு திரும்பியவுடன் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளும் என்று இலங்கையின் சிரேஷ்ட அமைச்சர் திஸ்ஸ விதாரண நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகளில் பங்கேற்கும்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

ஐ.தே.க., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. என்று எல்லாக் கட்சிகளும் தெரிவுக்குழுவில் தமது முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம்.

முதலில் எதிர்க்கட்சிகள் எந்தெந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இனங்காண வேண்டும்.

இந்திய அரசுடனான பேச்சுக்களை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

அத்துடன் அவர்கள் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பற்றிய தமது பட்டியலை சமர்ப்பிப்பார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# எண்ணெய் ஆய்வில் மலேசியாவும்

(கொழும்பு)

மலேசிய அரசாங்கத்தின் எரிபொருள் நிறுவனமான பெற்றோனஸ் இலங்கையில் எண்ணெய் ஆய்வுகளில் ஈடுபடவுள்ளது.

பாக்குநீரிணையின் மன்னார் கடற்பகுதியில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மலேசிய அரசாங்கத்தின் உதவியுடன் இதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இதன்படி மலேசிய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் இணைந்து எண்ணெய் ஆய்வுப்பணி மற்றும் அகழ்வுகளில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# உலக அஞ்சல் தினம்

(யாழ்ப்பாணம்)

உலக அஞ்சல் தினம் இன்று கொண்டாடப்படுவதால் இத்தினத்தையொட்டி சங்கானை அஞ்சலகத்தினால் பட்டினசபை வீதியிலுள்ள உருத்திரா முன்பள்ளி, ஓடக்கரை வீதியிலுள்ள சலேசியார் முன்பள்ளி, அறிவகம் முன்பள்ளி ஆகிய முன்பள்ளி சிறார்களுக்கான பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

65


# மகா பராக்கிரமபாகு

கலாநிதி. க.குணராசா (செங்கை ஆழியான்)
திருமதி. கமலா. குணராசா



### பராக்கிரமபாகுவின் திக்விஜயம்

...அதன்பின்னர் அவர்கள் நூற்றுக் கணக்கான போர்க்கப்பல்களில் சேனாவீரர்களோடு புறப்பட்டு முத்துச் சலாபத்தை (மன்னார்) கைப்



பராக்கிரமபாகு மன்னன் அமைத்த பவள கோவில் எனப்படும் பப்புளு விகாரை

பற்றினர். அந்தப்பிரதேசத்தின் தலைவனையும் கைது செய்தனர். அவ்விடத்தில் பலமான ஒரு படை முகாமை அமைத்துவிடுமாறு மன்னன் கட்டளையிட்டான். இதன்படி பிலாவாசு என்றவிடத்தில் ஒரு கோட்டை அமைத்து பராக்கிரம் கொண்ட வீரர்களை அங்கு இருத்தினர். இதனைக் கேள்விப்பட்ட கஜபாகு அமைச்சர்களுடன் ஆலோசனை செய்து பெரும் சைனியம் ஒன்றினை அங்கு அனுப்பி வைத்தான். அதனை எவ்வாறு சமாளிக்க வேண்டுமென்பதைத் தெரிந்திருந்த பராக்கிரமபாகு, றக்காதண்டநாயக்கனைப் படையோடு சென்று ஜனபதப் பிரதேசத்தைத் தாக்குமாறு பணித்தான். அதனால் தன் சைனியத்தை இரண்டு பிரிவுகளாக வகுத்து ஒன்றினை பிலாவாசுக் கோட்டை அமைந்த பகுதிக்கும், மற்றையதை ஜனபதவுக்கு அனுப்ப நேர்ந்தது. எனினும் கஜபாகுவின் படைகளைத் தண்டநாயக்கன் முறியடித்தான். அதன்பின்னர் ஜனபதவில் பலமாக ஒரு கோட்டையை மன்னனின் பணிப்பின்படி அமைத்தான். பராக்கிரமபாகுவின் சைனியத்தை முறியடித்து வெற்றி கொள்ள கஜபாகு பல தடவைகள் முயற்சிசெய்து தோல்வியடைந்தான்.

அடுத்து பராக்கிரமபாகு தன் தளபதிகளில் திறன் மிக்கவனான தேவசேனாதிபதி என்பவனை அழைத்துச் சேனாவீரர்களோடு, கஜபாகுவின் இன்னொரு பெரும் சைனியம் முகாமிட்டுள்ள கிரிபாப் பிரதேசத்தைத் தாக்குமாறு கட்டளையிட்டான். தேவசேனாதிபதி பல பிரதேசங்களைக் கைப்பற்றிப் பாதுகாப்பு அரண்களை அமைத்தபடி முன்னேறினான். கஜபாகுவின் தளபதிகளான ராமா, நிலகிரி போன்றோரைக் கொன்றதோடு, கடக்குடா போன்ற தளபதிகளைக் கைப்பற்றி பராக்கிரமபாகுவிடம் அனுப்பி வைத்தான். இந்நிலையில் பராக்கிரமபாகு, பெரும் சைனியத்துடன் புறப்பட்டு, அனுராதபுரத்தில் எதிரிகளின் படைகளை முறியடித்து அனுராதபுரத்தைக் கைப்பற்றிக் கொண்டான். அதனைக் கேள்விப்பட்ட கஜபாகு தன் தளபதிகளுடன் வீரர்களை அனுப்பி அனுராதபுரத்தைச் சுற்றி முற்றுகையிட்டு முக்கிய வீதிகளில் தடைகளை ஏற்படுத்தினான். இந்தச் சூழ்நிலையினை அறிந்த தேவசேனாதிபதி தன் வீரர்களுடன் அனுராதபுரத்துக்குப் புறப்பட்டான். எதிர்ப்பட்ட கஜபாகுவின் சைனியத்தைத் துவம்சம் செய்தான். அதே வேளை மலையராஜாவும் தன் படைகளுடன் தேவசேனாதிபதிக்கு உதவ முன்வந்தான். தேவசேனாதிபதியும் மலையராஜாவும் அனுராதபுரத்துக்குரிய பாதைகளில் முற்றுகையிட்டிருந்த கஜபாகுவின் படைகளை அழித்து அனுராதபுரத்தில் அரண் அமைத்தனர். அதன்பின்னர் பொலநறுவையை நோக்கிச் சைனியத்தைப் பராக்கிரமபாகு நடாத்தினான். செல்லும் வழியிலுள்ள நாலந்தா, ஆளிசாரா முதலான இடங்களில் இருந்த கஜபாகுவின் கோட்டைகளைப் பராக்கிரமபாகு கைப்பற்றிக் கொண்டான்.




பராக்கிரமபாகு கல்விகாரைச் சிலைகள்- சயனபுத்தர், நின்ற நிலையில் புத்தர், தியான நிலை புத்தர்

அதன்பின்னர் பொலநறுவையைக் கைப்பற்றும் நோக்குடன் பராக்கிரமபாகுவின் படை நகர்ந்தது. இந்த வேளையில் உருகுணை மன்னன் மாணாபரணன் இந்த யுத்தத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டான். முன்னர் பல தடவை கஜபாகுவுக்கு எதிராகப் படையெடுத்துத் தோல்வி கண்டு சோம்பிக் கிடந்த மாணாபரணண், பராக்கிரமபாகு அடைந்து வருகின்ற வெற்றிகள் உருகுணை மன்னனுக்குக் கவலை அளித்தது. இராஜரட்டையைப் பராக்கிரமபாகு கைப்பற்றிக் கொண்டால் அவனால் உருகுணையைக் கைப்பற்றிக் கொள்வது கடினமாக அமை யாது என எண்ணமிட்டான். எனவே, பராக்கிரமபாகுவை இந்த யுத்தத்தில் தோல்வி காண வைக்க வேண்டும் என்று எண்ணித் தன் படைகளை கஜபாகுவுக்கு ஆதரவாக பொலநறுவை நோக்கி அனுப்பி வைத்தான். ஆனால், பராக்கிரமபாகுவின் வெற்றி உறுதிப்பட்ட நிலையில் தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு, பராக்கிரமபாகுவுக்கு உதவ முன்வந்தான். அதனால் தன் படைகளை சோபொரா என்றவிடத்தில் முகாமிடவைத்துப் பொலநறுவையைத் தாக்கச் சந்தர்பத்தை எதிர்நோக்கியிருந்தான்.

### கஜபாகுவின் தோல்வி

பராக்கிரமபாகுவின் படைகள் பொலநறுவையைச் சுற்றி முற்றுகையிட்டன. அவனுடைய படைகள் இலங்காநாதன், மகிந்தன் முதலான தளபதிகளின் தலைமையில், பொலநறுவைக்கு மேற்கு வாயிலாக விளங்கிய கண்டிகாமம் கணவாயூடாக நகர்ந்தன. இக்கணவாயைக் காப்பாற்ற முயன்ற கஜபாகுவின் படை படுதோல்வியைச்சந்தித்து, பொலநறுவைக்குப் பின்வாங்கிச் சென்றது. பொலநறுவைக் கோட்டையைச் சென்றடைந்த பராக்கிரமபாகுவின் படைத் தளபதிகள் மேககேது, கீர்த்தி இலங்காநாதன் முதலானோர் தாம் தான் புலத்தி நகருக்குள் முதலில் நுழைய வேண்டுமென முன் நின்றனர். அதே வேளை கஜபாகு தன் எஞ்சிய சேனாவீரர்களை ஒன்று திரட்டி நகருக்கு வெளியே இயன்றளவு நகரத்தைப் பாதுகாக்கும் எண்ணத்துடன் அணிவகுத்தான். கஜபாகுவைக் கொல்லாது உயிருடன் கைது செய்ய வேண்டுமென பராக்கிரமபாகு கட்டளையிட்டிருந்தான். நகரின் வெளியே நிகழ்ந்த யுத்தத்தில் கஜபாகுவின் படைகள் தோல்வி கண்டன. மன்னன் கஜபாகு கோட்டைக்குள் ஓடி இரகசியமான இடம் ஒன்றில் ஒளிந்து கொண்டான். பராக்கிரமபாகுவின் படைத் தளபதிகள் மேககேதுவும் கீர்த்தி இலங்காநாதனும் கோட்டை மதில்களைத் தகர்த்துக் கொண்டு புலத்திநகரினுள் புகுந்தனர். ஒளிந்திருந்த கஜபாகுவைத் தேடிக் கைதுசெய்து சிறையிலிட்டனர். அத்துடன் அந்த நாட்டின் இளவரசர்களான சோழகங்கனையும் விக்கிரமபாகுவையும் கைதுசெய்து சிறையிலடைத்தனர். அச்செய்திகளை நகருக்கு வெளியே தங்கியிருந்த பராக்கிரமபாகுவுக்குத் தெரியப்படுத்தினர். மன்னனையும் இளவரசர்களையும் கைது செய்ததோடு கொள்ளையிடலிலும் பராக்கிரமபாகுவின் படைகள் ஈடுபட்டதால், புலத்தி நகரினுள் கலவரங்கள் ஏற்பட்டன.

அதனால் கலக்கமும் கோபமுமடைந்த புலத்திநகர் அமைச்சர்களும் முக்கிய பிரதானிகளும் கலந்து பேசி, சொபோராவில் தன் படையுடன் முகாமிட்டிருந்த உருகுணை மாணாபரணனிடம் சென்று தமக்கு உதவுமாறும், ஸ்ரீவல்லபனின் மகனும் கஜபாகுவின் பெறாமகனும் பராக்கிரமபாகுவின் ஒன்றுவிட்ட சகோதரனுமாகிய அவனுக்குள்ள உரிமையை எடுத்துக்கூறி, இச்சந்தர்பத்தைப் பயன்படுத்தி பொலநறுவையைக் கைப்பற்றி அரசுரிமையை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். காலவாவியின் தலைவன் கோகண்ணவும் உடன் தண்டெடுத்து வருமாறு கேட்டுக் கொண்டான். மதிமயங்கிப்போன மாணாபரணன், அரசனை விடுவித்து, பராக்கிரமபாகுவின் படைகளை முறியடித்து, பொலநறுவையின் முடியைப் பூணுவேன் என்ற திடத்துடன் புலத்திநகர் மீது படையெடுத்துச் சென்றான். கஜபாகுவின் படைத்தளபதிகளினதும் தன் தளபதிகளின் உதவிகளுடன் பராக்கிரமபாகுவின் படைகளை முறியடித்தான். தேவசேனாதிபதியைக் கைது செய்தான். சிறைச்சாலைக்கு விரைந்து கஜபாகுவை விடுவித்தான்.


பராக்கிரமபாகு மன்னன் காலத்து திவங்க புத்தர் விகாரையில் கட்டப்பட்ட கூரை அமைப்பு

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# த.தே. கூட்டமைப்பு இந்தியாவின் மாநிலக்கட்சியாக மாறியுள்ளது

## ஹெல உறுமய தெரிவிப்பு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இந்தியாவின் மாநில கட்சியாக மாறியுள்ளதாகவும் அவர்களின் இந்திய விஜயத்தினால் இலங்கையில் தலையீடுகளை மேற்கொள்ள இந்தியாவுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் என ஜாதிக ஹெல உறுமயவின் தேசிய அமைப்பாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ண சிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை ஏலமிட நடவடிக்கை எடுத்துள்ளதன் மூலம் தமிழ்மக்கள் மேலும் நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

ஜனாதிபதியின் இந்தியாவின் சாஞ்சி பிரதேசத்திற்கு விஜயம் செய்த பின்னர் இந்திய பிரதமர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியாவுக்கு வருமாறு அழைப்பு விடுத்தார். இதன்மூலம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இலங்கையின் அரசியல் கட்சியாக செயற்படவில்லை என்பதும் அது இந்தியாவின் மாநில கட்சியாக செயற்படுகிறது என்பது தெளிவாகியுள்ளது.

தமிழ் மக்களின் துன்ப துயரங்கள் குறித்து பேசுவதென்றால் அதனை ஜனாதிபதியுடனேயே பேச வேண்டும் அன்றி இந்தியாவுடன் அல்ல. இந்தியாவை கொண்டு இலங்கை மீது அழுத்தங்களை கொடுத்து பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் இந்த ஏலம் காரணமாக வடபகுதிக்கு எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர்மேலும் தெரிவித்தார். (அ-2)

### வடமேல் மாகாணத்திற்கு ஆளுநர் நியமனம்

வடமேல் மாகாண ஆளுநராக திஸ்ஸ பலல்ல, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் அலரி மாளிகையில் வைத்து ஜனாதிபதியினால் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# சபாநாயகர் நாடாளுமன்றில் விசேட உரை ஆற்றவுள்ளார்

(கொழும்பு)

சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நீதித்துறைக்கும் நாடாளுமன்றத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகள் தொடர்பாக அடுத்தவாரம் நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தும் விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளதாக தெரியவருகிறது.

திவிநெகும சட்டமூலம் தொடர்பான தீர்ப்பை உயர்நீதிமன்றம் தனக்கு நேரடியாக அறிவிக்காது நாடாளுமன்ற செயலாளர் தம்மிக்க திஸாநாயக்கவுக்கு அறிவித்ததன் மூலம் தனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக சபாநாயகர் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

சபாநாயகரின் இந்த அறிவிப்பு நாடாளுமன்றத்திற்கும் நீதிமன்றத்திற்கும் இடையில் மோதலை பகிரங்கமாக அறிவித்த சந்தர்ப்பம் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் சபாநாயகர் ஆற்றவுள்ள உரையானது நீதித்துறையில் அழுத்தங்களை ஏற்படுத்தும் எனவும் நீதித்துறைக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் இருந்து வரும் பனிப்போரை அது உச்சத்திற்கு கொண்டு செல்லக்கூடும் எனவும் அரசாங்கத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# வாழ்க்கைச் செலவு சுட்டெண் வர்த்தமானியில் வெளிவர வேண்டும்

## ஐ.தே.க. அறிவிப்பு

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு சுட்டெண் வர்த்தமானியில் அறிவிக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. வாழ்க்கைச் செலவு சுட்டெண் தொடர்பில் வர்த்தமானியில் அறிவிப்பதன் மூலம் உழைக்கும் வர்க்கத்தினர் நன்மை அடைவார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். அவர்மேலும் தெரிவிக்கையில்,

வாழ்க்கைச்செலவு சுட்டெண்ணில் சம்பளங்கள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். வாழ்க்கைச் செலவு புள்ளி மாறும் தன்மையுடையது.

வாழ்க்கைச் செலவு புள்ளி தொடர்பான தகவல்களை வெளியிடுவது மிகவும் அவசியமானது.

எனினும் ஆளும்கட்சி அமைச்சர் வாழ்க்கைச் செலவு புள்ளி தொடர்பில் தன்னிச்சையான தீர்மானங்களை எடுக்க முடியாது.

ஊழியர் சேமலாப நிதி தொடர்பில் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த விரும்புவதாக 21 தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் ஜனாதிபதிக்கு அதற்கான சாதகபதில்கள் எதனையும் அளிக்கவில்லை என குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# கொல்லப்பட்ட 17 அக்சன் பெய்ம் பணியாளர்களுக்கு நீதி வழங்கவேண்டும்

## நவம்பர் மாதக்கூட்டத்திற்காகக் காத்திருக்கிறோம் என்கிறது அக்சன் பெய்ம் நிறுவனம்

(கொழும்பு)

திருகோணமலை மூதூரில் செயற்பட்டு வந்த அக்சன் பெய்ம் நிறுவன பணியாளர்கள் 17 பேர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் நீதி வழங்கப்பட வேண்டும் என்று மீண்டும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரான்சை தலைமையகமாகக் கொண்ட அந்த நிறுவனம் வீடியோ, கையொப்பம் மற்றும் மனுக்களை கொண்டு போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 4 ஆம் திகதியன்று கொல்லப்பட்ட இந்த 17 பேர் தொடர்பில் இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனினும் இலங்கை அரசாங்கம் உரிய விசாரணைகளை முன்னெடுக்கவில்லை.

இதனையடுத்து எதிர்வரும் நவம்பர் மாதம் ஜெனீவாவில் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் கலந்துரையாடப்படும் போது வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளப்போவதாக அக்சன் பெய்ம் குறிப்பிட்டுள்ளது.

குறித்த படுகொலைச் சம்பவமானது உள்நாட்டுப் போரின்போது யதார்த்தமாக இடம்பெற்றதாக தொரியவில்லை. இலங்கை இராணுவத்தினரால் திட்டமிட்டு செய்யப்பட்ட போர்க்குற்றம் எனவும் அக்சன் பெய்ம் குறிப்பிட்டுள்ளது.

இப்படுகொலைச் சம்பவங்களுக்கெதிரான விசாரணைகளை அரசியல் குறுக்கீடு மற்றும் நீதிச்சுதந்திரமின்மை போன்றவற்றால் இலங்கை அரசாங்கம் மூடிமறைத்துவிட்டது.

இதனை கடைசி வாய்ப்பாக கருதி சுயாதீன விசாரணையை மேற்கொள்ளுமாறு ஐ.நா. மனித உரிமை பேரவையை வலியுறுத்த வேண்டும் என்று கூறியே பாரிஸில் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அக்சன் பெய்ம் நிறுவனம் தெரிவித்துள்ளது. (அ-2)

# இரு இளைஞர்கள் தற்கொலை; பொலிசார் தீவிர விசாரணை

ஹற்றன் மற்றும் ஹங்வெல்ல பிரதேசங்களில் இரண்டு இளைஞர்கள் தற்கொலை செய்து கொண்டனர். உலக கிண்ண இருபதுக்கு 20 கிரிக்கெட் இறுதிப்போட்டியை நேற்று முன்தினம் பார்த்த பின்னரே அவர்கள் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்ட பொழுதிலும், சம்பவங்கள் தொடர்பில் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஹற்றன் குடா ஓயா பிரதேசத்தில் 22 வயது தமிழ் இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் கிரிக்கெட் போட்டியை பார்த்துவிட்டு வீடுதிரும்பிய நிலையில் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இவர் அதிக மது போதையில் இருந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

எனினும் மரணத்திற்கான உண்மையான காரணத்தை அறிய தொடர்ந்தும் விசாரணைகளில் ஈடுபட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை ஹங்வெல்ல- நிரிபொல பிரதேசத்தில் இளைஞன் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

நேற்று அதிகாலை குறித்த இளைஞன் தமது வீட்டின் அருகில் இருந்த மாமரத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டதாக ஹங்வெல்ல பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நள்ளிரவில் வீடு திரும்பிய தமது புதல்வர் காலை வேளையில் வீட்டில் இல்லாமை குறித்து அவரின் தாயார் தேடியுள்ளார்.

நேற்றுமுன்தினம் குறித்த இளைஞர் அயலவர் வீட்டில் கிரிக்கெட் போட்டியை பார்த்துவிட்டு நள்ளிரவில் வீடு திரும்பினார்.

தமது புதல்வர் இரவு உணவை உட்கொண்டு விட்டு நித்திரைக்குச் சென்றதாக தாயார் தெரிவித்தார்.

இருந்த போது காதல் தொடர்பில் ஏற்பட்ட முறுகல் நிலையே மரணத்திற்கு காரணம் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (அ-2)

### உளநல தின விழா

(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலய கல்வி அலுவலகத்தில் சர்வதேச உளநல தினவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய அக்குவைனஸ் கேட்போர் கூடத்தில் **விரும்பத்தக்க மனிதராய் நம்மை நாமே செதுக்குவோம்** எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் அன்ரன் சோமராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பொது வைத்தியசாலையின் வைத்திய கலாநிதி எஸ். சிவதாஸ் கலந்து கொள்ளவுள்ளதுடன் மாணவர்களின் உள ஆற்றுப்படுத்தல் நிகழ்வுகளும் உள வெளிப்பாட்டு ஆக்க கண்காட்சியும் இடம்பெறவுள்ளது. (அ-9-266)



வவுனியா தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் வைத்திய கலாநிதி எஸ். சிவதாசின் நலமுடன் மற்றும் மகிழ்வுடன் இரு நூல்களின் வெளியீடு வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி அருட்செல்வம், திருமதி நளாயினி அருட்செல்வம் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் நூலின் முதற்பிரதியை வைத்திய கலாநிதி வீ. சுதாகரன் பெறுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கத்தில் பற்களை கடிப்பது ஏன்?

குழந்தைகளின் தூக்கம் தொடர்பான பிரச்சினைகளில் முக்கியமானதாக இருப்பது பல் கடித்தல் பழக்கம். உறக்கத்தில் திடீரென நறநறவென பற்களை கடித்துக் கொள்வார்கள். அந்தச் சமயத்தில் குழந்தையை எழுப்பிக்கேட்டாலும் எதுவும் அவர்களுக்கு ஞாபகத்தில் இருக்காது. பெரும்பாலும் குழந்தைகளின் மனதில் அழுந்திக்கிடக்கும் ஏதோ ஒரு கவலைதான். இப்படிப் பல் கடிப்பாக வெளிப்படுகிறது. குழந்தைகள் முன்னிலையிலேயே வீட்டில் அப்பா, அம்மா சண்டையிடுவது அல்லது சரியாகப் படிக்கவில்லை என்று குழந்தையை திட்டவது என இதன் பின்னணியில் ஏதாவது ஒரு காரணம் ஒளிந்திருக்கும். வயிற்றுப்பூச்சித் தொந்தரவு இருந்தாலும் சில குழந்தைகள் இதுபோன்று தூக்கத்தில் பற்களை கடிக்கும். இப்படி தொடர்ந்து பற்களை கடிப்பதால் பற்களின் மேல் இருக்கும் எனாமல் பாதிப்புக்கு உள்ளாகும். இதைத் தடுக்க குழந்தையின் பற்களுக்கு இடையே டூத் கார்டு (Tooth guard) பொருத்தலாம். குழந்தையுடன் பேசி அதன் மனக்கவலையை தீர்க்கும் விதமாக ஆலோசனை வழங்குவதே இந்த பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வு.

அடுத்ததாக குழந்தைப்பருவத்தை கடந்து வளரிளம் பருவத்தை எட்டும் போதும் தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் தொடர்கின்றன.

படிப்பு, டிவி, செல்போன் அரட்டை என்று பல காரணங்களால் இந்த பருவத்தில் இருக்கும் பிள்ளைகள் இரவு வெகுநேரம் விழிப்பதால் இவர்களது தூக்க நேரம் வெகுவாகச் சுருங்கி



விடுகிறது. மூளைக்கு தேவையான அளவு ஓய்வும் கிடைக்காமல் போய்விடுகிறது. விளைவு... பள்ளியில் பாடம் படிக்கும் போதே தூக்க உணர்வுக்கு ஆட்படுவார்கள். பகல் முழுவதுமே ஒரு விதமான சோர்வு நிலையில் சுறுசுறுப்பின்றி இருப்பார்கள். இந்தப் பிரச்சினையை போதுமான தூக்கம் இல்லாமை **Insufficent Sleep Syndrome** என்று குறிப்பிடுகின்றோம்.

மாலையில் பள்ளி முடிந்ததும் ஸ்பெஷல் கிளாஸ் ட்யூஷன் வீட்டுக்கு வந்த பின்னர் மறுபடியும் வீட்டுப்பாடம் என ஓய்வு இன்றி இவர்கள் இயங்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

இதனால் இரவில் தொடர்ச்சியான தூக்கமும் கிடைக்காமல் பகலில் நன்றாக ஆழ்ந்து படிக்கவும் முடியாமல் திணறுகிறார்கள். இரவில் தொடர்ச்சியான ஆழ்ந்த தூக்கமும் பகலில் ஓரளவு பொழுதுபோக்கும் இருந்தால் தான் புத்துணர்வோடும் முழுக்கவனத்துடனும் பாடம் படிக்க முடியும்.

வளரிளம் பருவத்தினருக்கு சாதாரணமாக எட்டில் இருந்து ஒன்பது மணி நேரத்தூக்கம் அவசியமானது. வாழ்க்கை சூழலில் நாமே ஏற்படுத்திக் கொண்ட மாற்றத்தினால் தான் இந்த நேர அளவீட்டில் குறைவு ஏற்படுகிறது. எளிதில் இதனை மாற்றிக் கொள்ளவும் முடியும். இது வியாதி அல்ல என்பதை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

வளரிளம் பருவத்தில் இருக்கக்கூடிய ஒரு சில குழந்தைகளுக்கு இரவில் நேரம் கழித்து தூங்குவதும் காலையில் தாமதமாக விழித்தெழுவது போன்ற தாமததூக்கக் குறைபாடு (**Delayed Sleep Phase Syndrome**) இருக்கும். இதற்கு காரணம் அவர்களது உடலில் தூக்கத்தை வரவழைக்கும் மெலட்டோனின் சுரப்பியில் ஏற்படும் மாறுபாடுகளே. சாதாரணமாக இரவில் 9 மணியில் இருந்து 11 மணிக்குள்ளாக இந்த மெலட்டோனின்சுரந்துதூக்கத்தைவரவழைக்கும். ஆனால், பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கோ இரவு 1 மணி அல்லது 2 மணி அளவிலேயே இந்த மெலட்டோனின் சுரப்பு நடை பெறும். அதனால் விழித்தெழும் நேரமும் காலை 10 மணி தொடக்கம் 11 மணி என்றாகி விடுகிறது. ஒளிச் சிகிச்சை (Light Therapy) மூலமும் மெலட்டோன்சுரக்கச்செய்யும்மாத்திரைகள்மூலமாகவும் இந்தப் பிரச்சினையை எளிதாக சரி செய்ய முடியும். வளரிளம் பருவத்தில் ஆரம்பிக்கும் தாமதமான தூக்க குறைபாடு பிரச்சினை பின்னர் கல்லூரிப்பருவம், நடுத்தர வயது என்று தொடரவும் வாய்ப்பு உண்டு.

சரி தாமதமாக தூங்குவதை பற்றி சொல்லிவிட்டீர்கள். இரவில் வெகு விரைவாகவே சிலருக்கு தூக்கம் வந்துவிடுகிறதே.... அது என்ன பிரச்சினை என்ற கேள்வியும் சிலருக்கு இருக்கும். உண்மைதான் இரவு 7 மணிக்கு எல்லாம் எனக்கு கண்ணைக் கட்டிக் கொண்டு வருகிறது என்றவாறு படுக்கையில் சாய்ந்து விடுபவர்களும் இருக்கிறார்கள் தான். வயதானவர்களுக்கு தான் இந்த பிரச்சினை அதிகமாக இருக்கிறது.

# சமிபாட்டுத் தொகுதியின் நலன்கள்

உடலில் வாய்க் குழியில் தொடங்கி களம் இரை ப்பை, சிறுகுடல், கல்லீரல், கணையம், பெருங்குடல் என சமிபாட்டுத் தொகுதி உறுப்புகளின் நலனைக் காப்பது மிகவும் எளிதானது.

தினமும் அதிகளவு நீர் குடித்தல், அதிக கொழுப்புச்சத்து இல்லாத-நார்ச்சத்து நிறைந்த உணவு , நேரத்துக்கு நேரம் சாப்பிடுதல், உடற்பயிற்சி, புகை- மதுப்பழக்கம் இல்லாமை, வயிற்றில் வலி உட்பட அறிகுறிகள் ஏற்பட்ட உடனே மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் சமிபாட்டுத் தொகுதியில் நோய் வராமல் பார்த்துக் கொள்ள முடியும்.

**மூடநம்பிக்கைகள்:**-வயிற்றுப் பகுதியில் பிரச்சினை ஏற்படும் நிலையில் பல தவறான நம்பிக்கைகள் உள்ளன.

❖ வயிற்று வலி ஏற்பட்டால் மருத்துவரிடம் செல்லாமல் தானே அல்சர் அல்லது அமீபியாசிஸ் என எல்லோரிடமும் கூறுதல்.

❖ ஆசன வாயில் புண் அல்லது மலம் கழிக்கும் போது இரத்தம் வெளியேறினால் மருத்துவரிடம் செல்லாமல் பைல்ஸ் உள்ளதாகக் கூறுதல்.

❖ மஞ்சள் காமாலை என நினைத்து கையில் சூடு போட்டுக் கொள்ளுதல் எனப் பல தவறான நம்பிக்கைகள் உள்ளன. எனவே, பிரச்சினை ஏற்பட்ட உடனேயே மருத்துவரிடம் செல்வது அவசியம்.

வயிற்றில் எரிச்சல், நெஞ்சுவலி அல்லது மாரடைப்பு உண்மையான பிரச்சினை என்ன என்பதை முழுமையான மருத்துவப் பரிசோதனை செய்து தெரிந்து சிகிச்சை செய்து கொள்வது அவசியம்.

ஏனெனில் நெஞ்சு எரிச்சல் பிரச்சினையாக இருந்தால் உயிருக்கு ஆபத்தில்லை. அதேசமயம் இதயக்கோளாறு காரணமாக ஏற்படும் நெஞ்சுவலியை மார்பு எரிச்சல் என சுயமாக நினைத்துக் கொண்டு சிகிச்சை எடுத்துக் கொள்ளாமல் அலட்சியமாக இருந்தால் உயிருக்கே ஆபத்து ஏற்படலாம்.

**எச் பைலோரி பக்றீரியா:** வயிற்றுப் புண்ணுக்கு பெரும்பாலும் காரணம் எச் பைலோரி பக்றீரியாதான். மேலும் மூட்டு வலி உட்பட பிற நோய்களுக்குச் சாப்பிடும் வலி நிவாரணி மருந்துகள் காரணமாகவும் வயிற்றில் புண் ஏற்பட வாய்ப்பு உண்டு.

முன்பெல்லாம் வயிற்றுப்புண் பிரச்சினைக்கு **Vagotomy** அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அதாவது உணவுக்குழாய் முடிந்து இரைப்பை தொடங்கும் இடத்தில் அமிலத்தைச் சுரக்க உள்ள இரண்டு நரம்புகளுக்கு வாகஸ் (**vagus**) என்று பெயர். அமிலச் சுரப்பைக் கட்டுப்படுத்தி வயிற்றுப்புண் பிரச்சினைக்கு தீர்வுகாண இந்த நரம்புகளை அகற்றும் அந்தக் கால அறுவைச் சிகிச்சை முறையே வாகோடமி ஆகும். ஆனால், வயிற்றுப்புண் பிரச்சினைக்கு 85 சதவீத அளவுக்கு எச் பைலோரி பக்றீரியா தான் காரணம் என கண்டுபிடிக்கப்பட்டு விட்டால் இப் பிரச்சினையை மருந்துகள் மூலம் குணப்படுத்தி விட முடியும்.

**மூன்று வகையான வயிற்றுப் புண்கள்:**

❖ உணவுக்குழாயில் புண் (**Oesophageal Ulcer**)

❖ இரைப்பையில் புண் (**Gastric Ulcer**)

❖ முன்குடல் பகுதியில் புண் (**Duodenal Ulcer**),இதுதவிர சிறுகுடலில் நெருப்புக் காய்ச்சல் காரணமாகவும் (**Typhoid Ulcer**) புண் ஏற்படலாம். காசநோய் காரணமாக (**Tuber culo sis Ulcer**) சிறுகுடல்,பெருங்குடலில்புண்ஏற்படலாம்.

**உணவுக்குழாயில் புண் இருப்பதற்கான அறிகுறிகள்:** புண் உள்ள இடத்துக்கு தகுந்தவாறு அறிகுறிகள் வேறுபடும். உணவுக் குழாயில் புண் (**Oesophageal Ulcer**) , உள்ள நிலையில் நெஞ்சுவலி எரிச்சல் ஏற்படும். புகை, மதுப் பழக்கம் இருந்தால் இந்த எரிச்சல் அதிகமாகும். சொக்லேட்,ஐஸ்கிறீம் போன்ற கொழுப்புச்சத்து நிறைந்தவற்றை தொடர்ந்து சாப்பிடும் நிலையில் உணவுக்குழாயிலிருந்து இரைப்பைக்குச் செல்லும் இடத்தில் உள்ள சுருக்குத் தசை விரிவடைந்து இரைப்பையிலிருந்து அமிலம் மேல்நோக்கி வரும்.

Health Care மருத்துவ உலகம்
உங்கள் நலம் உங்கள் கைகளில்

மனித உடற்கூறு இயலின்படி வாயிலிருந்து வயிறு வரை ஒருவழிப்பாதைதான். வீதியில் ஒருவழிப்பாதையில் செல்லும் நிலையில் விபத்து ஏற்படலாம் அல்லது பொலிஸார் இல்லாவிட்டால் விபத்து இல்லாமல் அன்றைய வீதி மீறல் போய்விடும். ஆனால், வாய்-உணவுக் குழாய்-இரைப்பை ஒருவழிப் பாதையாக இருப்பதற்கு வயிற்றை உணவுக்குழாய் நெருங்கும்போது உள்ள சந்திப்பில் உள்ள சுருக்கத்தசையே (**Sphincter**) காரணம். இது ஒரு சிறப்புத் தன்மையாகும்.

புகை, மதுப்பழக்கம், அதிக கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகள் காரணமாக இந்த சுருக்கத் தசையை விரிவடையச் செய்து பிரச்சினையை வரவழைத்துக் கொள்கிறோம். எனவே, சுருக்கத் தசைக்கு முதல் மரியாதை கொடுத்து புகை-மதுபோன்றகெட்ட பழக்கங்களை விட்டுவிடுங்கள்.

**முன் குடலில் புண் இருப்பதற்கான அறிகுறிகள்**

பொதுவாக முன்குடலில் ஏற்படும் புண் (**Duodenal Ulcer**) காரணமாக பெரும்பாலானோர் பாதிக்கப்படுகின்றனர். வெறும் வயிற்றில் எரிச்சல், அதிக பசி, சாப்பிட்டவுடன் வலி நின்று விடுதல், காரம் அதிக உள்ள உணவுகளைச் சாப்பிட்டவுடன் எரிச்சல் ஆகியவை முன்குடல் புண்ணின் முக்கிய அறிகுறிகளாகும். காற்றுடன் போத்தல்களில் அடைக்கப்பட்ட பானங்களை (**Aerated Drinks**) தொடர்ந்து சாப்பிடும் நிலையில் எரிச்சல் அதிகரிக்கும். பழச் சாறுகள் சாப்பிடலாம்.

**இரைப்பையில் புண் இருப்பதற்கான அறிகுறிகள்**

இரைப்பையில் புண் (**Gastric Ulcer**) இருந்தால் பசி குறைவாக இருக்கும். அதாவது இரண்டு இட்லி சாப்பிட்ட உடனேயே பசி அடங்கி விடும். சாப்பிடுவதற்கு முன்போ அல்லது சாப்பிட்ட பின்னரோ இரைப்பை புண் காரணமாக வலி ஏற்படலாம்.

**புண் இருப்பதை கண்டுபிடிப்பது எப்படி?**

வயிற்றில் வலி ஏற்பட்ட உடனேயே சுயமாக அல்சர் என அலட்சியமாக இருந்து விடக்கூடாது. ஏனெனில் மேலே சொன்ன வயிற்றுப் புண் பிரச்சினைகளில் இரைப்பையில் புண் ஏற்பட்டிருந்தால் ஆபத்தாக முடிய வாய்ப்பு உண்டு. ஏனெனில் இரைப்பையில் ஏற்பட்டுள்ள ஆரம்ப நிலைப் புற்றுநோய் காரணமாகக் கூட வலி ஏற்படலாம். எனவே, எண்டாஸ்கோப்பி பரிசோதனை மூலம் உணவுக்குழாய் முதல் சிறுகுடல் வரை எந்த இடத்தில் புண் உள்ளது. புண்ணின் தீவிரத் தன்மை, புண்ணுக்கான உண்மையான காரணம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்வது அவசியம். குறிப்பாக இரைப்பையில் புற்றுநோய் காரணமாக புண் ஏற்படவில்லை என்பதை உறுதி செய்து கொள்வது மிகவும் அவசியம்.

**பக்றீரியாவைக் கண்டுபிடிப்பது எப்படி?**

எண்டோஸ் கோப்பி பரிசோதனை செய்யும்போதே தேவைப்படும் நிலையில் சதையைக் கிள்ளி எடுத்து சதைப் பரிசோதனையையும் (பயாப்ஸி) செய்து விட முடியும். இதிலிருந்து வயிற்றுப்புண் பிரச்சினைக்கு எச் பைலோரி பக்றீரியா காரணமா எனக் கண்டு பிடித்து விட முடியும்.

**புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டு பிடிக்க...**

உணவு விழுங்க முடியாத பிரச்சினை-புரையேறுதல்- குரலில் மாற்றம் ஆகிய அறிகுறிகள் ஒருங்கிணைந்து இருத்தல், உணவு விழுங்குதல் பிரச்சினையுடன் முதுகில் வலி, வயிற்றுப் புண் உள்ளிட்டவற்றை அலட்சியப்படுத்தாமல் உடனடியாக எண்டோஸ்கோப்பி பரிசோதனை செய்யும் நிலையில் புற்று நோய் பாதிப்பை உடனடியாக கண்டு பிடித்து விட முடியும். உணவுக் குழாயில் உள்ள புற்றுநோய் பாதிப்பு உடலின் பிற பகுதிகளுக்குப் பரவாமல் உள்ள நிலையில் அறுவைச் சிகிச்சைமூலம் குணப்படுத்திவிட முடியும். எனவே, ஆரம்ப நிலை பரிசோதனையே சிறந்தது.

உணவுக் குழாய் புற்றுநோய் தீவிரமாகி இருந்தால் பாதித்த உணவுக்குழாயை அகற்றி விட்டு இரைப்பையை உணவுக்குழாயாக மாற்றும் அறுவைச் சிகிச்சை செய்யப்படும். இதன் மூலம் நோயாளியால் ஓரளவு மீண்டும் சாப்பிடத் தொடங்க முடியும். குறைவாகத்தான் சாப்பிட முடியும் என்றாலும் கூட பசிக்கும் போதெல்லாம் நோயாளி சாப்பிடலாம்.

**இரைப்பை புற்றுநோய்:**- மேலே குறிப்பிட்டது போல் வயிற்றுப்புண்ணுக்கு சோதனை செய்யும் போது இரைப்பையில் புற்றுநோய் காரணமாக புண் இல்லை என்பதை உறுதி செய்வது அவசியம். இரைப்பையில் புற்றுநோய் பாதிப்பு ஆரம்ப நிலையில் இருந்தால் பாதிக்கப்பட்ட பகுதியை மட்டும் அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி குணப்படுத்தி விடலாம். ஆனால், இரைப்பை முழுவதும் புற்றுநோய் பரவியிருந்தால் முழு இரைப்பையையும் அகற்றி விட்டு உணவுக்குழாயை சிறு குடலுடன் சேர்க்கும் அறுவைச் சிகிச்சை செய்யப்படும். இதன் மூலம் நிவாரணம் கிடைக்கும்.

**மதுவைத் தவிர்க்க வேண்டும்:**-தொடர்ந்து சிறிது அளவு மது அருந்தும் நிலையில் இதய நலன் பாதுகாக்கப்படும் எனக் கூறப்படுகிறது. இது சரியானது அல்ல. ஏனெனில் எந்த அளவு மது அருந்தினால் இதயத்துக்கு நல்லது என்றோ, எந்தளவு அருந்தினால் கெடுதல் என்றோ இதுவரை நிரூபனங்கள் எதுவும் இல்லை. எனவே, இதய நலனைக் குறிப்பிட்டு மதுப்பழக்கத்தை மேற்கொள்வதை இரைப்பை- குடல் மருத்துவம் ஏற்றுக் கொள்ளாது. இதேபோன்று உடல் முழுவதுக்கும் தீங்கு விளைவிக்கும் புகை பழக்கம் கூடவே கூடாது. யானை சாப்பிடுவது போன்று நார்ச்சத்து நிறைந்த உணவுகளை அதிகளவு சாப்பிடும் நிலையில் மலச்சிக்கல் இருக்கவே இருக்காது. மலச்சிக்கல் இல்லாத நிலையில் ஜீரண உறுப்புகள் தொடர்பான நோய்கள் வராமல் பெருமளவுக்கு தவிர்த்துக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் சனத்தொகையில் 30 சதவீதத்தினர் தொழில் வாய்ப்பு அற்றநிலையில்

இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து நாட்டில் அமைதி ஏற்படுத்தப்பட்டு, மூன்று ஆண்டுகள் கழிந்த நிலையிலுகூட, முன்னர் யுத்தம் இடம் பெற்ற வடக்கில் வாழும் இளைஞர்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்வது என்பது, சவால் மிகுந்த ஒன்றாக காணப்படுவதாக அபிவிருத்தி, தொழில் வாய்ப்பை ஆய்வு செய்த வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் வடக்கில் மிகப் பெரிய கட்டுமான அபிவிருத்தித் திட்டங்கள் அமுல்ப்படுத்தப்படுகின்ற போதிலும்கூட வேலை வாய்ப்பு பற்றாக்குறை நிலவுவதாகவும், தனியார் துறையின் பலவீனமே இதற்கான முக்கிய காரணமெனவும் வல்லுநர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இது தொடர்பான உத்தியோக பூர்வ புள்ளிவிபரங்கள் கிடைக்காவிட்டாலும்கூட, வடக்கில் வாழும் மொத்த சனத்தொகையில் 30 சதவீதமானவர்கள் தொழில் வாய்ப்பின்றி உள்ளதாக அவ் வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

போன்றன இணைந்து மார்ச் 2012 இல் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.


**போர் இடம்பெற்ற வலயங்களில் தனியார் துறைச் செயற்பாடுகள் விரிவுபடுத்தப் படாமையே இதற்கான பிரதான காரணமாக உள்ளதாக யாழ்ப்பாண மாவட்டத்தை தளமாகக் கொண்டியங்கும் பருத்தித்துறை அபிவிருத்தி மையத்தின் பிரதான ஆராய்ச்சியாளரான முத்துக்கிருஸ்ணா சர்வானந்தன் தெரிவித்தள்ளார்.**

வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய அபிவிருத்திப் பணிகளில் தெற்கைச் சேர்ந்த பணியாளர்களும் இலங்கை இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்படுகின்றனர் என முத்துக்கிருஸ்ண சர்வானந்தன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வன்னியிலுள்ள இளையோர்களுக்கு இலங்கை அரசாங்கமும் மனிதாபிமான அமைப்புகளும் இணைந்து தொழில்சார் பயிற்சிகளையும் விவசாய உபகரணங்கள் மற்றும் பயிர் விதைகளை வழங்கி வருகின்ற போதிலும் தற்போதும்கூட வன்னிவாழ் இளைஞர்கள், தொழில் அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் உதவியுடன் ஆடைத் தொழிற்சாலையொன்றை அமைப்பது தொடர்பிலும் பரிசீலித்து வருகிறது.

இங்கே தனியார் துறையினர் மிகக் குறைந்தளவான நடவடிக்கைகளிலேயே ஈடுபடுகின்றனர். தொழிற் பயிற்சிகளைப் பெற்றவர்களில் பெரும்பாலானவர்கள் சுயதொழிலில் ஈடுபடுகின்றனர்.

ளுக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்புகள் தற்போது அரிதாகவே காணப்படுகின்றன என சர்வானந் தன் தெரிவித்துள்ளார். இந்தப் பிராந்தியத்தில் வெளி மாவட்டங்களை அல்லது வெளி நாடுகளைச் சேர்ந்தவர்கள் முதலீடுகளை மேற்கொள்வார்கள் என எதிர்பார்ப்பதைவிட உள்ளூர் தனியார்துறையினர் தமது ஒத்துழைப்புகளை இவர்களுக்கு வழங்கி



வடக்கில் வீதி அபிவிருத்தி

முதலீடுகளை மேற்கொள்வதில் ஏற்படும் காலதாமதத்தை குறைத்து தமது பிரதேசத்தின் பொருளாதார வளிர்ச்சியில் முன்னின்று செயற்பட வேண்டுமென விஜசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

தான் வாழும் பிரதேசத்தில் வேலை தேடியும் கிடைக்காததால், 15 மாதங்களுக்கு முன்னர் இலங்கையின் தெற்குப்பகுதி நோக்கி வேலை தேடிச் சென்றதாகவும் தற்போது கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் உள்ள சிறிய பலசரக்குக் கடையொன்றில் பணிபுரிவதாகவும் கிளிநொச்சியைச் சேர்ந்த 32 வயதான விசு தெரிவித்துள்ளார்.

"தற்போது நான் மாதம் 150 அமெரிக்க டொலர்களை வருவாயாகப் பெறுகிறேன். நான் தொடர்ந்தும் கிளிநொச்சியில் வேலை தேடி அலைந்திருந்தால், இந்த வருவாயை என்னால், ஈட்டிக்கொள்ள முடியாது" என விசு கூறுகிறார்.

"வடக்கில் வாழும் தமிழ் இழையோர்களில் பெரும்பாலானவர்கள் நாட்டின் பெரும்பான்மையினர் பேசும் சிங்கள மொழியை பேசமுடியாதவர்களாக உள்ளதால், அவர்களால் குறிப்பிட்ட சில தொழில்களை தவிர வேறெத


2001 இல் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு 2012 இல் இலங்கை அரசாங்கத்தால் மேற்கொள்ளப் பட்ட மதிப்பீட்டின்படி, நாட்டின்

களை மேற்கொள்வதில் பெரும் இடர்களை அனுபவிப்பதாக கிளிநொச்சி மாவட்ட வர்த்தக சம்மேளன செலாளர் சிவத்தம்பு நவரத்தினராஜா தெரிவித்துள்ளார்.

அல்லது இந்தப் பிரதேசத்தை விட்டு வேறிடங்களுக்குச் செல்கின்றனர் என நவரத்தினராஜா தெரிவித்துள்ளர். தொழில் வாய்ப்பை உருவாக்குதல் என்பது மிக மெதுவாக நடைபெறுவதாகவும் இவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புதிய தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டதால், இலங்கையின் வடக்கு மாகாணத்தின் பொருளாதரமானது 2011 இல் 27 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் சர்வானந்தன் மற்றும் கொள்கைக் கற்கைக்கான நிறுவனத்தின் பொருளியலாளரான அனுஸ்கா விஜய சிங்க தெரிவித்துள்ளனர்.

கட்டுமானத்திட்டங்கள் மூலம் தொழில்களை உருவாக்கிக் கொள்ள முடியும். மிகப்பெரிய அளவில் அபிவிருத்திகளை மேற்கொள்ளும் போது அவற்றிற்கு ஈடுகொடுக்



முல்லை-புதுமாத்தளனில் மீள்குடியேறிய மக்களின் தற்காலிகவீடு

மொத்த சனத்தொகையில் 28 சதவீதத்தினர், 10-24 வயதுக்குட்பட்டோர் எனவும், யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் 2 இலட்சத்து 80 ஆயிரம் இளைஞர்கள் உள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முலலைத்தீவு மாவட்டங்கள் மற்றும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகள் உள்ளடங்கலான வன்னியென அறியப்படும் முன்னைய யுத்தவலயத்தில் வாழும் மக்களில் 37 சதவீதமானவர்கள் கூலி வேலைகளில் ஈடுபடுகின்றனர் என இலங்கை அரசாங்கம், ஐ.நா. சிறுவர் நிதியம் மற்றும் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம்

## இங்கு நிகழும் அபிவிருத்திப் பணிகளில் தெற்கின் பணியாளர்கள், இராணுவத்தினர்!

குறிப்பிட்ட சில நிறுவனங்களே வன்னிப்பிராந்தியத்தில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளன. சிறப்பு அங்காடித்தொடர் மற்றும் விவசாய நடவடிக்கை நிறுவனமான கார்கில் சிலோன் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஆரியர் நாகர் கிராமத்தில் குடிநீர் சுத்திகரிப்பு ஆலை ஒன்றை அமைத்துவரும் அதேவேளையில் இந்தக் கிராமத்தில் அனைத்துலக

கக்கூடிய அளவில் பெரியளவிலான தொழில்வாய்ப்புகள் உருவாகும். ஆனால், யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட இளையோர்கள் பெரியளவிலான இயந்திரங்களை இயக்குதல் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்துதல் போன்றவற்றில் போதியளவு அனுபவத்தைக் கொண்டிராதவர்களாக காணப்படுகின்றனர். இதனால், இவர்க

னையும் செய்யமுடியாதுள்ளது. எனது கிராமத்திலுள்ள பலர் சிங்களம் அல்லது அங்கிலம் பேசத் தெரியாதவர்கள். இவ்விரு மொழிகளில் ஏதாவது ஒன்றைக் கூடப் பேசத் தெரியாவிட்டால், கொழும்பில் வாழமுடியாது" எனவும் விசு தெரிவித்துள்ளார்.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளின் எண்ணத்தை கூட்டமைப்பு வேறு வடிவத்தில் பெற முனைகிறது

## அது நிறைவேறாது என்றார் பசில்

(கொழும்பு)

**பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு முன்னர் தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் அரசாங்கமும் பேச்சு நடத்துவதில் அர்த்தமில்லை. அரசியல் தீர்வை காணவேண்டுமாயின் தமிழ்க்கூட்டமைப்பு சகல கட்சிகளும் கலந்து கொள்ளும் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு வரவேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அரசியல் தீர்வு விடயம் மற்றும் அதற்கான நகர்வுகள் தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் இவ்விடயம் குறித்து மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்க்கூட்டமைப்பை தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்று கூறமுடியாது. மேலும் தீர்வு விடயத்தில் புலிகள் அமைப்பு கொண்டிருந்த நிலைப்பாட்டை தமிழ்க்கூட்டமைப்பும் கொண்டுள்ளது. இது தீர்வு முயற்சிக்கு ஆரோக்கியமானதல்ல.

புலிகள் ஆயுதம் மூலமாக பெற முயற்சித்ததை தமிழ்க் கூட்டமைப்பினர் வேறு வடிவங்கள் ஊடாக பெற முயற்சிக்கின்றனர். ஆனால், அந்த முயற்சி நிறைவேறாது. தீர்வு வேண்டுமாயின் பாராளுமன்ற தெரிவுக்குழுவே சிறந்த இடமாகும்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பானது பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து கொண்டு தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணும் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமாகும்.

தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பொருத்தமான இடமாக பாராளுமன்ற தெரிவுக்குழுவே காணப்படுகிறது. சகல கட்சிகளும் பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம் பெற முடியும். அப்போதுதான் யதார்த்தகரமான தீர்வை எட்டமுடியும்.

இதேவேளை, பாராளுமன்ற தெரிவுக் குழுவில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் இடம் பெறுவதற்கு முன்னர் அரசாங்கமும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் பேச்சு நடத்துவதில் அர்த்தம் இல்லை. அவ்வாறு பேச்சு நடத்த முடியாது.

ஆரம்பத்தில் ஆளும் கட்சியும் தமிழ்க் கூட்டமைப்பும் பேச்சு நடத்தின. அதாவது தீர்வு விடயம் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கருத்தை அறியும் நோக்கிலேயே இந்த சுற்றுப்பேச்சுக்கள் இடம்பெற்றன.

ஆனால், அதன்போது பாராளுமன்ற தெரிவுக்குழுவிலிலேயே இதற்கு யதார்த்தமான தீர்வை அடைய முடியும் என்று உணரப் பட்டது. அதனாலேயே பாராளுமன்ற தெரிவுக்குழுவானது ஆளும் கட்சியினால் பிரேரிக்கப்பட்டது. ஆனால், அந்த தெரிவுக்குழுவில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இதுவரை கலந்து கொள்ளாமல் இருக்கின்றது.

பாராளுமன்ற தெரிவுக்குழு என்பது அனைத்து கட்சிகளும் பங்குபற்றும் ஒரு களமாகும். எனவே, அங்கு தேசிய மட்ட இணக்கத்தை அடைய முடியும். இவை பொதுவான மட்டத்தில் திறந்த அறைக்குள் பேசப்பட வேண்டிய விடயமாகும்.

தீர்வு விடயத்தில் இரண்டு கட்சிகள் மட்டும் சேர்ந்து இரகசிய அறைக்குள் பேச்சு நடத்த முடியாது. இதனை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். தீர்வு என்று வரும் போது முஸ்லிம் தரப்பு குறித்தும் சிந்திக்க வேண்டும். அதனால் தான் தெரிவுக்குழு பொருத்தமான இடம் என்று கூறுகின்றோம்.

ஆனால், தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் புலிகள் எதனை செய்தனரோ அதனையே செய்து வருகின்றனர். அதாவது புலிகள் தாங்களே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் எனக் கூறிவந்ததுடன் நாட்டை பிரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

திம்பு பேச்சு முதல் ஒஸ்லோ வரை புலிகள் எண்ணம் அதுவாகவே இருந்தது. தற்போது தமிழ்க்கூட்டமைப்பும் அந்த நிலைப்பாட்டையே கொண்டுள்ளது. புலிகள் ஆயுதத்தினால் செய்ய முயற்சித்ததை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வேறு வடிவத்தில் செய்ய முயற்சிக்கின்றனர். அவர்களின் அந்த முயற்சி நிறைவேறாது. தெரிவுக்குழுவில் கலந்து கொள்ள ஏன் கூட்டமைப்பு தயக்கம் காட்டுகின்றது என்று தெரியவில்லை என்றார். (அ-2)



யா/இந்து ஆரம்ப பாடசாலையில் கடந்த 5 ஆம் திகதி ஆசிரியர் தினவிழா நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் விருந்தினர்கள் மலர் மாலை அணிவித்து மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதை படத்தில் காணலாம்.

(படம்:- அலுவலகச் செய்தியாளர்)

# ஆஸி.அகதிகள் பப்புவாதீவுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்

## ஆஸி. அமைச்சர் கிறிஸ்பொவன் தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைந்தவர்களை பப்புவா நியூகினியின் மானுஸ் தீவுகளுக்கு அனுப்பும் நடவடிக்கைகள் ஒருவார காலத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைந்து கிறிஸ்மஸ் தீவுகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை நவுறு மற்றும் பப்புவா நியூகினி தீவுகளுக்கு அனுப்பும் நடவடிக்கையை அவுஸ்திரேலியா ஆரம்பித்துள்ளது.

நவுறு தீவுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அடுத்த கட்டமாக பப்புவா நியூகினியின் மானுஸ் தீவுகளுக்கு அனுப்பும் பணிகள் ஒருவார காலத்துக்குள் ஆரம்பிக்கப் படும் என அவுஸ்திரேலலிய குடிவரவு குடியகல்வுத் துறை அமைச்சர் கிறிஸ்பொவன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பப்புவா நியூகினிக்கு அனுப்பப்படுபவர்களை தங்க வைப்பதற்கான அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும் ஒரு வாரத்துக்குள் முதல் தொகுதியினர் அங்கு அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மானுஸ் தீவில் தங்க வைக்கப்படவுள்ளவர்களுக்கான வசதிகள் குறித்து இரு நாடுகளும் இணைந்து செயற்படுவதாக சுட்டிக் காட்டிய அவர் ஒரு வாரத்துக்குள் முதல் தொகுதியினரை அனுப்ப முடியும்.

இது இவ்விதமிருக்க அவுஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் சட்டவிரோதமாக செல்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்தே வருகிறது.

கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்டிருப்பவர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரிப்பதால் இடநெருக்கடி காரணமாக கலவரங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக கிறிஸ்மஸ் தீவின் நிர்வாக அதிகாரி ஒருவர் எச்சிரித்துள்ளார். (அ-2)

# நாட்டில் நிலவும் வெப்பநிலை சில தினங்களில் மாற்றமடையும்

## வானிலை அவதான நிலையம் தெரிவிப்பு

நாட்டில் நிலவும் கடும் வெப்பநிலையுடன் கூடிய காலநிலை இன்னும் சில தினங்களில் மாற்றமடையுமென வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

எதிர்வரும் ஓரிரு தினங்களில் இடைப்பருவ பெயர்ச்சி உருவாகுவதற்கான அனைத்து அறிகுறிகளும் தோன்றியிருப்பதனால் மாலை வேளையில் மழை பெய்வதுடன் வளிமண்டலம் குளிர்ச்சியடைந்து வெப்பநிலை வீழ்ச்சியடையுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் அதிகாரியான டயனா ஹெந்தவித்தாரன கூறினார்.

வவுனியா, பொலநறுவை உள்ளிட்ட சில பகுதிகளில் கடந்த வாரம் முழுவதும் கடும் வெப்ப நிலை நிலவி வருகிறது. கடந்த மூன்று தசாப்த காலத்தில் இம்முறையே வெப்பநிலை அதி உச்ச நிலையை அடைந்திருப்பதாகவும் அவ்வதிகாரி குறிப்பிட்டார்.

இதன்படி வவுனியாவில் 40.1 பாகை செல்சியசிலும் பொலநறுவையில் 39.6 பாகை செல்சியசிலும் கடும் வெப்பநிலை நிலவி வருகிறது.

இதுரை நிலவி வந்த தென்மேற்கு பருவப் பெயர்ச்சியுடன் கூடிய நிலையிலேயே தற்போது நாட்டின் சில பகுதிகளில் அதிகூடிய வெப்பநிலையை உணரக்கூடியதாகவுள்ளது.

இடைப்பருவ பெயர்ச்சிக்காலநிலையில் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் மாலை வேளைகளில் மழை பெய்வது வழமை. காலையில் ஓரளவு வெயிலும் மாலை 3 மணியை தொடர்ந்து இடி மின்னலுடனும் கூடிய அடை மழையையும் எதிர்பார்க்கலாம். (அ-2)

# மக்கள் சேவைக்கு தடையான சட்டங்களில் திருத்தம் அவசியம்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் சேவைக்கு தடையாக அமைந்துள்ள சகல சட்டங்களிலும் திருத்தம் செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2013 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டம் தொடர்பில் கருத்து கோரும் நோக்கில் நடைபெற்ற சந்திப்பொன்றின் போது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் நலனை கருத்திற்கொண்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு சில சட்டங்களினால் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சட்டங்களை கண்டறிந்து அவற்றில் திருத்தம் செய்யப்பட வேண்டியது அவசியமானது.

மக்கள் ஆணைக்கு புறம்பாக செயற்பட எவருக்கும் உரிமை கிடையாது. நாட்டின் அபிவிருத்திக்காக அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

244

## உண்மையான குற்றவாளி

முன்னொரு காலத்தில் கலிங்கநாடு வளமான நாடாக விளங்கியது. அந்தநாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான்.

அவனிடம் கலை வேலைப்பாடுகள் நிறைந்த தேர் ஒன்று இருந்தது. அழகான வெள்ளைக் குதிரைகள் அந்தத் தேரை இழுத்துச் சென்றன.

குதிரைகளின் சேணங்களில் தங்க இழைகள் பின்னப்பட்டிருந்தன. தேர் செல்லும்போது அவை பளபள வென்று மின்னின.

அந்தத் தேரை தன் உயிரை போல மதித்தான். எங்கே சென்றாலும் தேரில் அமர்ந்தே சென்றான்.

அவனுக்கு ஓய்வு கிடைத்தால் போதும். நகரத்திற்கு வெளியே உள்ள பூஞ்சோலைக்குச் செல்வான். அங்கே பொழுதை இனிமையாகக் கழிப்பான்.

தேரில் அமர்ந்த அவன் பூஞ்சோலைக்குச் சென்றான். இருட்டும் வரை அங்கேயே பொழுதைக் கழித்தான். நள்ளிரவில் அரண்மனை திரும்பினான் அவன்.

அரண்மனை முற்றத்திலேயே அவனுடைய தேர் நின்றது.

குதிரைகளை அவிழ்த்த வீரர்கள் அவற்றை இலாயத்தில் கட்டினார்கள்.

சேணங்களை எடுத்து அவர்கள் பாதுகாப்பாக வைக்கவில்லை. தேரின் மேலேயே கிடந்தன.

காலையில் அவற்றை எடுத்துப் பாதுகாப்பாக வைக்கலாம் என்று நினைத்தார்கள்.

அன்றிரவு நல்ல மழை பெய்தது.சேணங்கள் மழையில் நன்கு நனைந்தன. சேணங்களின் தோல் தண்ணீர் பட்டு மென்மையாயிற்று.

அரண்மனை நாய்கள் அங்கு வந்தன. சேணங்களின் தோலைக்கடித்து விளையாடின. அவற்றைப் பிய்த்து உண்டன.

பொழுது விடிந்தது. வீரர்கள் அங்கு வந்தார்கள்.

சேணங்கள் துண்டு துண்டாகிக் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டார்கள்.

என்னசெய்வது? அரசரின் தண்டனையிலிருந்து எப்படித் தப்பிப்பது? என்று சிந்தித்தார்கள்.



அரசனிடம் வந்த அவர்கள் அரசே நேற்றிரவு அரண்மனைக்குள் எப்படியோ தெருநாய்கள் நுழைந்து விட்டன. குதிரைகளின் சேணங்களைக் கடித்து நாசமாக்கி விட்டன.

எங்களைக் கண்டதும் அவை ஓடிவிட்டன என்று நடுங்கிய படியே சொன்னார்கள்.

கோபம் கொண்ட அரசன் வீரர்களே! தெருநாய்கள் அரண்மனைக்குள் நுழைந்தனவா? குதிரைகளின் சேணங்களை நாசமாக்கி விட்டனவா? அவை எங்கு ஓடினாலும் விடாதீர்கள். அடித்துக் கொல்லுங்கள் என்று கட்டளையிட்டான்.

அதன்படியே வீரர்கள் நகரமெங்கும் அலைந்தார்கள் அங்கு திரிந்த நாய்களைக் கொல்லத் தொடங்கினார்கள்.

நிறைய நாய்கள் கொல்லப்பட்டன.

இந்தக்கொடுமையைத் துறவி ஒருவர் பார்த்தார். அவர் உள்ளம் நாய்களுக்காக இரக்கப்பட்டது. அவற்றைக் காப்பாற்ற நினைத்தார். நாய்கள் ஏன் கொல்லப்படுகின்றன என்று விசாரித்து அறிந்தார்.

கட்டுக்காவல் நிறைந்தது அரண்மனை. தெருநாய்கள் அங்கே சென்றிருக்க வாய்ப்பில்லை.

சேணங்களைக் கடித்தவை அரண்மனை நாய்களாகத் தான் இருக்கும் என்ற முடிவுக்கு வந்தார்.

அரசவைக்குச் சென்ற அவர் அரசனைச் சந்தித்தார்.

அரசே நாய்களைக் கொல்வதை நிறுத்துங்கள் என்று வேண்டினார். கோபம் அடங்காத அரசன் துறவியாரே! விலையுயர்ந்த சேணங்களை அவை கடித்துப் பாழாக்கிவிட்டன.

குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை தருவது அரசனின் கடமை. நீங்கள் இதில் குறுக்கிடாதீர்கள் என்று கடுப்புடன் சொன்னான்.

அரசே உண்மையான குற்றவாளிகளை நீங்கள் தண்டியுங்கள். நான் குறுக்கிடமாட்டேன். எந்தக்குற்றமும் செய்யாத தெருநாய்களை ஏன் கொல்கிறீர்கள்.

துறவியாரே! தெருநாய்கள் குற்றம் செய்யவில்லையா? சேணங்களைக் கடித்து நாசமாக்கவில்லையா?

அரசே தெருநாய்கள் அரண்மனைக்குள் நுழைய வாய்ப்பேயில்லை. அவை எப்படிச் சேணங்களைக் கடித்திருக்க முடியும்.

துறவியாரே எதனால் அப்படிச் சொல்கிறீர்கள்? அப்படியானால் சேணங்களைக் கடித்துப் பாழாக்கியது எந்த நாய்கள்? தெருநாய்கள் என்று என் வீரர்கள் சொன்னது பொய்யா?

அரசே அரண்மனை நாய்கள்தான் அப்படிச் செய்திருக்கவேண்டும்.

துறவியாரே! அரண்மனை நாய்கள் வயிறார உணவு உண்பவை. எப்பொழுதும் கட்டுப்பாட்டுடன் இருப்பவை.

சேணங்களை அவை கடித்திருக்க வாய்ப்பேயில்லை. தெருநாய்கள் தான் கடித்திருக்க வாய்ப்புண்டு.

சேணங்களைக் கடித்தவை அரண்மனை நாய்கள் தான் என்று உங்களால் நிறுவமுடியுமா?

அரசே எளிதாக நிறுவ முடியும். நான் சொல்வது போலச் செய்யுங்கள். மோரில் தர்ப்பைப் புல்லைக் கலந்து உங்கள் நாய்களுக்குக் கொடுங்கள். அதைக்குடித்தவுடன் அவை வாந்தியெடுக்கும். உங்களுக்கு உண்மை புரியும் என்றார் அவர்.

அரசனும் அப்படியே செய்யுமாறு ஏவலர்க்குக் கட்டளையிட்டான்.

அரண்மனை நாய்கள் மோரைக்குடித்தன.

சிறிதுநேரத்தில் அவை வாந்தி எடுத்தன. அதில் சேணத்தின் துண்டுகள் சில கிடந்தன.

இதைப்பார்த்த அரசனுக்கு உண்மை புரிந்தது. துறவியை வணங்கிய அவன் என்னை மன்னியுங்கள்.

உங்கள் அறிவுக்கூர்மையால் என் தவறை அறிய வைத்தீர்கள். இனி ஆராய்ந்து பாராமல் யாருக்கும் தண்டனை வழங்கமாட்டேன் என்றான்.

எண்ணம் நிறைவேறியது. நாய்களைக் காப்பாற்றி விட்டோம் என்ற மகிழ்ச்சியில் அங்கிருந்து புறப்பட்டார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வு கூடம் அமைப்பு

(நியூயோர்க்)

அமெரிக்கா, ரஷ்யா, ஜேர்மனி, பிரான்ஸ், ஜப்பான் உள்ளிட்ட 15 நாடுகள் இணைந்து சர்வதேச விண்வெளி ஆய்வு கூடம் அமைத்து வருகின்றனர். 5 இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா செலவில் இது உருவாக்கப்பட்டு வருகின்றது.

அதன் கட்டுமானப் பணி நடைபெற்று வருகின்றது. அதில் 15 நாடுகளை சேர்ந்த விண்வெளி வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளனர். கட்டுமானப் பொருட்கள் விண்கலம் மூலம் அங்கு கொண்டு செல்லப் படுகின்றது.

அப்பணியில் ஈடுபட்ட விண்கலங்கள் கடந்த ஆண்டு ஓய்வு பெற்று அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. எனவே கட்டுமான பொருட்களையும் சரக்குகளையும் ஏற்றிச் செல்ல தனியார் விண்கலத்தை அமெரிக்காவின் நாசா மையம் ஏற்பாடு செய்துள்ளது.

இதற்காக ஸ்பேஷ் 10 என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது. 12 தடவை கட்டுமான பொருள் மற்றும் சரக்குகளை ஏற்றிச் செல்லும் வகையில் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்து.

அதன்படி முதன்முறையாக நேற்று முன்தினம் தனியார் நிறுவனம் மூலம் சர்வதேச விண்வெளி மையத்துக்கு சரக்குகள் ஏற்றி அனுப்பப்பட்டன. அவை டிராகன் கார்கோ என்ற விண்வெளி ஓடத்தில் நிரப்பப்பட்டு பால்கன் 9 என்ற ரொக்கெட் மூலம் புளோரிடாவில் உள்ள கேப் கானவெல் விமானப் படை தளத்தில் இருந்து நேற்று விண்வெளியில் ஏவப்பட்டது.

அந்த டிராகன் ஓடம் நாளை (10 ஆம் திகதி சர்வதேச விண்வெளி ஆய்வு கூடத்தைச் சென்றடையும். அதில் அங்கு தங்கியிருக்கும் 6 வீரர்களுக்கு தேவையான 400 கிலோ உணவுப் பொருட்கள், ஆடைகள் மற்றும் ஆய்வுகூடத்துக்கு தேவையான பரிசோதனை கருவிகள் போன்றவை ஏற்றி அனுப்பப்பட்டுள்ளன.

பொருட்கள் இறக்கிவிட்டு இந்த தனியார் விண்வெளி ஓடம் வருகிற 28 ஆம் திகதி பூமிக்கு திரும்புகிறது. கலிபோர்னியாவில் பசுபிக் கடலில் தரை இறங்குகிறது. (அ-2)

# அமெரிக்காவில் மூளைக்காய்ச்சல்

## 7 பேர் பலி

(நாஷ்வில்லி)

அமெரிக்காவிலுள்ள வெர்ஜினியா, மேரிலாந்து, டென்னிஸ்சி, ஒஷியோ, மினிசோட்டா, மிஷிகன் உட்பட 9 மாநிலங்களில் கடந்த சில நாட்களாக மூளைக் காய்ச்சல் நோயால் பலர் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

டென்னிஸ்சி பகுதியில் 3 பேரும் வெர்ஜினியா, மேரிலாந்து மாநிலங்களில் தலா ஒருவரும் பலியானார்கள். இந்நிலையில் மிஷிகனில் அண்மையில் 2 பேர் உயிரிழந்தனர். இதனால் மூளைக் காய்ச்சல் பலி எண்ணிக்கை 7 ஆக உயர்ந்தது.

மேலும் இந்த பகுதிகளைச் சேர்ந்த 65 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக சுகாதாரத்துறை அறிவித்துள்ளது . (அ-2)

# சாவேஷ் மீண்டும் ஜனாதிபதியானார்


தென் அமெரிக்கா நாடான வெனிசுவேலாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் ஹுகோ சாவேஷ் நான்காவது தடவையாக வெற்றி பெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தலில் 90 சதவீத வாக்கு எண்ணப்பட்டுள்ளன. இதில் ஹுகோ சாவேஷ் 54 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளதாக அந்நாட்டு தேர்தல்கள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சி வேட்பாளரான ஹென்றிக் கப்ரில்ஸ் 44.97 வாக்குகளை பெற்றுள்ளதாக தேர்தல்கள் அலுவலகத்தலைவர் தெரிவித்தார்.

தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து ஜனாதிபதி ஹுகோ சாவேஷின் ஆதரவாளர்கள் தலைநகர் கரகாஸில் வெற்றிக் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

தேர்தலில் வெற்றிபெற்ற ஹுகோ சாவேஷுக்கு வாழ்த்துத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் ஹென்றிக் கப்ரில்ஸ் தேர்தலில் தோல்வியடைந்தமையை எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் உணர்ந்து கொள்ளமாட்டார்களென கூறினார். (அ-2)



அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் அமெரிக்காவின் குடியரசு கட்சியைச் சேர்ந்த ரோமி மற்றும் மனைவி வெஸ்ட் பாம் பீச் ஆகியோர் விமானத்தில் இருந்து இறங்குவதைப் படத்தில் காணலாம்.




# செவ்வாய்க்கிரகத்தில் ரோவர் விண்கலம்

## மண் துகள்களைத் தோண்டுகிறது

(அமெரிக்கா)

செவ்வாய்க்கிரகத்தில் ஆய்வு மேற்கொண்டுள்ள கியூரியாசிட்டி ரோவர் விண்கலம் அங்குள்ள மண் துகள்களை தோண்டி எடுப்பதற்கு தயாராகி வருவதாக நாசா அறிவித்துள்ளது.

அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையமான நாசா சார்பில் செவ்வாய்க்கிரகத்தில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக கியூரியாசிட்டி ரோவர் என்ற விண்கலம் அனுப்பப்பட்டது. இது கடந்த ஓகஸ்ட் மாதத்தில் செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியது.

இந்த விண்கலம் மேற்கொண்ட முதல் கட்ட ஆய்வில் செவ்வாய் கிரகத்தில் நீரோடை இருந்ததற்கு ஆதாரமாக சரளை கற்களாலான பாறைகள் காணப்படுவதை புகைப் படம் எடுத்து அனுப்பி இருந்தது.

மண் குவியல்கள் காணப்படுவது போன்ற புகைப்படங்களையும் அந்த விண்கலம் அனுப்பியிருந்தது.

இந்நிலையில் இன்னும் சில நாட்களில் அங்குள்ள மண் துகள்களை தோண்டி எடுத்து ஆய்வு மேற்கொள்ள உள்ளது.

இதற்காக அந்த விண்கலத்தில் நவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதுதவிர விண்கலத்தில் உள்ள கமெராவிலும் இந்த காட்சிகள் படம்பிடிக்கப்பட்டு உடனுக்குடன் நாசா தலைமை அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

விண்கலத்தால் சேகரிக்கப்படும் மண் துகள்கள் இரசாயன மற்றும் கனிமவளம் என்ற இரண்டு ஆய்வுகளுக்கு உட்படுத்தப் படவுள்ளன.

நாசா அதிகாரிகள் கூறுகையில்,

இரசாயன ஆய்வின் மூலம் மனித வாழ்வுக்கு தேவையான அடிப்படை பொருட்கள் செவ்வாய்க்கிரகத்தில் உள்ளனவா என்றும் கனிமவள ஆய்வின் மூலம் செவ்வாய் கிரகத்தின் கடந்த கால சூழ்நிலை குறித்தும் கண்டறிய முடியும் என்றார். (அ-2)

# 20 ஆயிரம் இணையத்தளங்களை முடக்கியது பாகிஸ்தான் அரசாங்கம்

யுடியூப் உள்ளடங்கலாக 20ஆயிரம் இணையத்தளங்களை பாகிஸ்தான் அதிகாரிகள் முடக்கியுள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்னஸன்ஸ் ஒப் முஸ்லிம் திரைப்படம் போன்ற ஆட்சேபனைக்குரிய விடயங்களை இணையத்தளங்களில் வெளியிடுவதால் இவ்வாறான இணையத்தளங்களை முடக்கியுள்ளதாக அந்நாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.

முஹம்மது நபி (ஸல்) அலைஹி வஸ்ஸலத்தை களங்கப்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட திரைப்படம் போன்ற ஆட்சேபனைக்குரிய விடயங்களை வெளியிடும் 20 ஆயிரம் இணையத்தளங்கள் மற்றும் வலைத்தளங்களை நாங்கள் சட்டபூர்வமாக முடக்கியுள்ளோம் என பாகிஸ்தான் தொலைத்தொடர்புகள் அமைப்பு அறிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய இன்னஸன்ஸ் ஒப் முஸ்லிம் திரைப்படம் மட்டும் இவ்வாறு இணையத்தளங்களை முடக்கப்படுவதற்கு காரணமில்லை. ஆயிரக்கணக்கான இணையத்தளங்களில் இவ்வாறு சர்ச்சைக்குரிய விடயங்கள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன. அப்படியான தேவையற்ற இணையத்தளங்களையும் வலைத்தளங்களையுமே நாங்கள் முடக்கியுள்ளோம் என பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (அ-2)

# இஸ்லாமிய சுதந்திர முன்னணியுடன் பிலிப்பைன்ஸ் உடன்படிக்கை

## யுத்தம் முடிபுக்கு வரும் என எதிர்பார்ப்பு

பிலிப்பைன்ஸ் நாட்டின் இஸ்லாமிய கிளர்ச்சிக்குழு சமாதான உடன்படிக்கைக்கு இணக்கம் தெரிவித்துள்ளதன் மூலம் அந்நாட்டில் தொடர்ந்து வந்த 40 வருடகால உள்நாட்டு யுத்தம் முடிபுக்கு வரும் என கருதப்படுகின்றது.

இஸ்லாமிய சுதந்திர முன்னணி (MILF) எனப்படும் இக்கிளர்ச்சிக்குழு பிலிப்பைன்ஸில் தனியாட்சி கோரி போராடி வந்தது. இதுவரை இராணுவத்திற்கும் இக்கிளர்ச்சிக் குழுவுக்கும் இடையில் நடைபெற்று வந்த மோதலில் சுமார் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெனிக்னோ அகுயினோ புதிய தன்னாட்சி பிராந்தியம் ஒன்றை கிளர்ச்சிக்குழுவுக்கென பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் இஸ்லாமியர்கள் பெரும்பான்மையாக வாழும் இடத்தில் அமைத்துக் கொடுப்பதற்கு சம்மதம் தெரிவித்தார். இதையடுத்து இந்த அமைதி உடன்படிக்கை எட்டப்படவிருக்கிறது.

பங்ஸ்மொரோ என பெயரிடப்பட்டுள்ள இந்த உடன்படிக்கைக்கான ஒப்பந்தம் அடுத்த வாரம் தலைநகர் மணிலாவில் கையெழுத்திடப்படவுள்ளது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.கல்வி வலய அதிபர்களுக்கு கூட்டம்

யாழ்.கல்வி வலய பாடசாலை அதிபர்களுக்கான முன்னேற்ற மீளாய்வு தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். இதில் சகல அதிபர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.வை.ரவீந்திரன் கேட்டுள்ளார். (அ)

## நடமாடும் நூலக சேவை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினரால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு புத்தகக் கண்காட்சியும் நடமாடும் நூலக சேவையும் நாளை புதன்கிழமை 11 மணிக்கு சரசாலை மயூரி முன்பள்ளியில் நடைபெறவுள்ளதாக என நூலகர் இ.தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (அ-3-29)

## நீரில் மூழ்கி மீனவர் பலி

(கரவெட்டி)

வடமராட்சி கடற்பரப்பில் மீனவர் ஒருவர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார். பருத்தித்துறை சுப்பர்மடம் கடற்பகுதியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை ஒரு படகில் இருந்து இன்னொரு படகிற்கு நீந்திச் செல்ல முற்பட்ட வேளையே நீரில் மூழ்கி உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

இச் சம்பவத்தில் விஸ்வமடு கல்லாறு பகுதியை சேர்ந்த வீரகுமார் ரஞ்சித்குமார் (வயது 22) என்ற மீனவரே பரிதாபமாக உயிரிழந்தவர் ஆவார்.

குறித்த மீனவர் விஸ்வமடு பகுதியில் இருந்து பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் தங்கியிருந்து கடற்றொழிலில் ஈடுபடுவதாகவும் தெரிய வருகிறது. சடலத்தை மீட்கும் பணியில் மீனவர்களும் கடற்படையினரும் ஈடுபட்டு வருகின்றனர். (அ-3-24)

## கவிதை நூலுக்கான விருது

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கிய வட்டத்தின் அனுசரணையுடன் அகில இலங்கை ரீதியாக கடந்த ஆண்டு வெளிவந்த கவிதைகளில் சிறந்த கவிதை நூலிற்கான மூதறிஞர் கவிஞர் அரியாலையூர் ஐயாத்துரையின் ஞாபகார்த்த விருது வழங்கும் நிகழ்வு எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

முல்லைத்தீவினைச் சேர்ந்த கி.பி.நிதுனின் துயரக்கடல் எனும் கவிதை நூலிற்கான பணப்பரிசையும் விருதினையும் கவிஞர் ஐயாத்துரையின் மகனும் யாழ். இலக்கிய வட்ட உறுப்பினருமான கவிஞர் ஐ.வரதராசா வழங்கவுள்ளார் என இலங்கை இலக்கியப் பேரவையின் செயலாளர் சி.சிவதாஸன் அறிவித்துள்ளார். இதுவரை இந்த ஞாபகார்த்த விருதினை ஆறு கவிஞர்கள் கடந்த காலங்களில் பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-9)

## புவியியல் பாட ஆசிரியர்களுக்கு செயலமர்வு

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரத்தில் புவியியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் வ/சைவப் பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

இச் செயலமர்விற்கு வளவாளராக பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார்.

எனவே, அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்களும் தங்கள் வலயத்தின் கீழுள்ள பாடசாலைகளில் க.பொ.த. உயர்தரத்தில் புவியியல் பாடம் கற்பிக்கும் அனைத்து ஆசிரியர்களையும் இச்செயலமர்வில் கலந்து கொள்வதற்கு ஆவன செய்யுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

## தமிழக அமைச்சர்களுக்கு சூடு, சொரணை கிடையாதா?

### வைகோ கடும் தாக்கு

(சென்னை)

காவிரி நதி விவகாரத்தில் மத்தியஅரசில் இருக்கும் தமிழக அமைச்சர்களுக்கு சூடு, சொரணை, மானம், ரோசம் எதுவும் கிடையாதா என ம.தி.மு.க. தலைவர் வைகோ கடுமையாக தாக்கியுள்ளார்.

இந்தியாவின் வெளிவிவகாரத்துறை அமைச்சராக இருக்கின்ற கர்நாடகத்தைச் சேர்ந்த எஸ்.எம்.கிருஷ்ணா அமெரிக்காவிலிருந்து கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில் தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் திறந்து விடுமாறு பிரதமர் அறிவித்ததைத் திரும்பப்பெற வேண்டும். தமிழ்நாட்டிற்கு தண்ணீர் தரக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் இதற்கு கண்டனம் தெரிவித்து வெளிப்படையாக பிரதமருக்குக் கடிதம் எழுதுகின்ற மான உணர்ச்சியோ, தமிழக நலனில் அக்கறையோ மத்திய அமைச்சரவையில் உள்ள தமிழகத்தைச் சேர்ந்த ஒரு அமைச்சருக்கும் இல்லை.

சூடும் சொரணையும் இல்லை என்பது வெட்கக்கேடானது ஆகும். இவர்களை அமைச்சர்கள் ஆக்கிவிட்டு தமிழகத்தில் வாக்குகளைப் பொறுக்க முற்படும் அரசியல் கட்சிகளை தமிழக மக்கள் இப்போதாவது அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

மேலும் தனது அறிக்கையில் தமிழகத்தின் பிரதான வாழ்வாதாரமான காவிரி நதிநீர்ப்பாசன உரிமை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தமிழகம் அனுபவித்து வரும் சட்டபூர்வ உரிமை ஆகும். (அ-2)

## இந்தி பாடகி ஆஷாவின் மகள் தற்கொலை

பிரபல இந்திப் பாடகி ஆஷா போன்ஸ்லேயின் மகள் வர்ஷா துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஆஷா போன்ஸ்லேயின் மகள் வர்ஷா (வயது 55) விளையாட்டுத்துறை பத்திரிகையாளரான ஹேமந்த்தை திருமணம் செய்திருந்தார். பின்னர் இருவரும் விவாகரத்து பெற்றுக் கொண்டனர். இந்நிலையில் திடீரென வர்ஷாவின் வீட்டில் துப்பாக்கிச் சத்தம் கேட்டதால் அயல் வீட்டார் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர்.

இதையடுத்து பொலிஸார் அங்கு சென்ற போது வர்ஷாவின் தற்கொலையை உறுதி செய்தனர். அவர் தலையில் சுட்டு தற்கொலை செய்திருக்கிறார். இதற்கு முன் பும் சிலமுறை வர்ஷா தற்கொலைக்கு முயன் றதாகவும் கூறப்படுகிறது.

வர்ஷாவின் தாயார் ஆஷா போன்ஸ்லே மராத்தி கலாசார விருதுகள் விழாவில் கலந்து கொள்ள சிங்கப்பூர் சென்றிருக்கிறார். அவருக்கு வர்ஷா தற்கொலை செய்த தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-2)

## கூடங்குளத்தில் நேற்று கடல் வழி முற்றுகை போராட்டம்

தமிழ் நாட்டில் கூடங்குளம் அணுவுலைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டக்காரர்கள் நேற்றைய தினம் கடல் வழியாக முற்றுகை போராட்டத்தை தொடங்கினார்கள்.

தற்போது கூடங்குளத்தில் உள்ள இரு அணுவுலைகளில் முதலாவது அணுவுலையில் எரிபொருள் நிரப்பும் பணி நிறைவடைந்துள்ளது. இன்னும் சில தினங்களில் மின் உற்பத்தி தொடங்கவுள்ள நிலையில் கடல் வழி போராட்டம் அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து நேற்றுக் காலை அணுவுலையை கடல் வழியே இந்த முற்றுகைப் போராட்டம் தொடங்கியுள்ளது.

கூடங்குளம் அணுவுலைக்கு எதிராக போராடுபவர்களுக்கு ஆதரவாக இன்று தூத்துக்குடி மீனவர்கள் ஸ்ரைக்கில் ஈடுபட்டனர்.

இதனால் தூத்துக்குடியில் 200 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள் கடலுக்கு செல்லாமல் கரையில் நிறுத்தப்பட்டுள்ளன. (அ-2)

## குஜராத் கப்பல் உடைக்கும் தளத்தில் விபத்து; 5பேர் பலி

குஜராத் மாநில கப்பல் உடைக்கும் தளத்தில் ஏற்பட்ட விபத்தில் 5 தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர். குஜராத் மாநிலத்தில் பாவ்நகர் மாவட்டம் அலாங்கில் உள்ள கப்பல் உடைக்கும் தளத்தில் நின்று கொண்டிருந்த எண்ணெய்க் கப்பல் வெடித்ததிலேயே இப் பரிதாப சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து பாவ்நகர் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் மஹேந்திர சிங் பாவர் கூறியது, அலாங் கப்பல் உடைக்கும் தளத்தில் எண்ணெய்க்கப்பலை உடைக்கும்பணியில்தொழிலாளர்கள் ஈடுபட்டிருந்த போது அந்தக் கப்பல் திடீரென வெடித்து தீப்பற்றி எரிந்தது. இந்த விபத்தில் 5 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். படுகாயமடைந்த 2 பேர் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். டேங்கர் வெடித்ததன் காரணம் தெரியவில்லை என்றும் இது குறித்து தடயவியல் நிபுணர்கள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் என அந்த சிங் தெரிவித்தார். (அ-2)


## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து)

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்தின் பராமரிப்பில் உள்ள வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றது. கூறுவிலை சமர்ப்பிக்க விரும்புவோர் தலைமைக்காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு 23.10.2012 ஆம் திகதிக்கு முன்னர் கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் பொது முகாமையாளர்
கண்டி வீதி, சாவகச்சேரி.

யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் தலைமைத்துவத்தை

பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
முத்துச்சாமி விக்னேஸ்வரன்
(SLPS 2.1)
(Sp.Trd. Primary Education
B.A, PGDE)

யாழ் வலயத்தின் முதன்மை அதிபராய் ஜனாதிபதியின் தேசிய விருதுக்கு தெரிவாகி மீபே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி நிலையத்தில் (CELD) அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடம் இன்று **பிரதீபா பிரபா** விருது பெறுவதை பாராட்டி வாழ்த்துகின்றோம். இன்னும் பல காலம் கல்விப்பணியாற்ற வேண்டுகின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறரிடம் குற்றம் காணாமல் நீ உன்னை ஒழுங்குபடுத்திக்கொள். -சைரஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பெருமெடுப்பில் வேண்டாம் சிறு எடுப்பிலாவது சந்தியுங்கள்

குறை கூறுவது, விதி என்று விம்முவது, ஒன்றுமில்லை என்று வீணாயிருப்பது என்பன எங்கள் இயல்பாகிவிட்டன.

இதன்காரணமாக முப்பெரும் விலங்கிற்குள் தமிழினம் அகப்பட்டுள்ளது.

இதுதவிர பகைமை பாராட்டுதல், சூழ்நிலையைப் பயன்படுத்தத் தவறுதல், இனம் என்ற அடிப்படையிலேனும் ஒன்றுபடாதிருத்தல், ஒன்றை ஏற்றுக் கொண்டால் அல்லது அங்கீகரித்துவிட்டால் பின்னர் அதுதொடர்பில் மீளாய்வுக்கு உட்படுத்தாமை உள்ளிட்ட எங்கள் பலவீனங்களும் சேர்ந்து எங்களுக்கு வாழ்மானமாகின்றன.

எனினும் இதுபற்றிச் சிந்தித்து ஆரோக்கியமான திட்டமிடல்களைச் செய்வதற்கு எவரும் இல்லையென்று சொல்லுமளவிற்கு நிலைமை ஏற்பட்டுள்ளது.

உதாரணமாக வட பகுதியில் அரசு மேற்கொள்கின்ற அபிவிருத்தித் திட்டங்களாயினும் சரி, அல்லது தமிழினத்திற்கு எதிரான செயற்றிட்டங்களாயினும் சரி, அது தொடர்பில் வட மாகாணத்தில் இருக்கக்கூடிய தமிழ் அதிகாரிகளை ஒன்றிணைத்துச் சந்தித்து கலந்துரையாடுகின்ற ஏற்பாடுகள் ஏதேனும் உண்டா? என்றால் எதுவும் இல்லை.

உண்மையில் வடக்கு மாகாண உயர் அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலர்கள், பிரதேச சபை அதிகாரிகள், கல்வி அதிகாரிகளுடனான சந்திப்புக்களை நடத்துவதன் மூலம் வீதி புனரமைப்பு முதல் கல்வி,பொருளாதாரம், திட்டமிடல் உள்ளிட்ட அத்தனை விடயங்களையும் வழிப்படுத்த முடியும்.

பொதுவில், தமிழ் அதிகாரிகள் பலருக்கு மக்கள் மட்டங்களில் அல்லது சமூகத் தரப்புகள் மத்தியில் கதைக்கப்படுகின்ற–விமர்சிக்கப்படுகின்ற விடயங்கள் சென்றடைவதில்லை.

இதன்காரணமாக அவர்கள் தாம் முன்னெடுக்கின்ற விடயங்களைச் சரியானது எனக் கருதுகின்றனர்.

எனவே அதிகாரிகளை குறைகூறுவதென்பது, எங்களின் இலக்கை அடைவதற்கான வழியல்ல.

ஆக, புத்திஜீவிகள் அடங்கிய ஓர் அமைப்பை உருவாக்கி அந்த அமைப்பு வடக்கு மாகாண தமிழ் அதிகாரிகளைச் சந்திக்க வேண்டும்.

இச்சந்திப்பு பெருமெடுப்பில் நடைபெறவேண்டும் என்ற தேவையில்லை.

மாறாக குறித்த உயர் அதிகாரியை அவரின் வீட்டில் சந்தித்து நிலைமையை கூறுவதாகக் கூட இருக்கலாம்.

இவ்வாறான சந்திப்புக்களை உடனடியாக ஏற்படுத்த வேண்டும்.

அப்போதுதான் தமிழ் மக்களின் நிலைப்பாடுகளை அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறி, எங்கள் பிரதேசத்திற்கு உகந்ததான திட்டமிடல்களை மேற்கொள்ள முடியும்.

வடக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் தொடர்பில் அரசு எந்த வியூகம் அமைத்தாலும் அதனை அமுல்படுத்துவதில் பெரும் பங்கு வகிப்பவர்கள் தமிழ் அதிகாரிகள் என்ற உண்மையை உணர்ந்து கொண்டு செயலாற்றுவோமாயின், காலச் சூழலை எங்களுக்கானதாக்க முடியும். இது சர்வ நிச்சயம்.

# டிப்பர் - மோ.சைக்கிள் விபத்து சம்பவ இடத்தில் ஒருவர் பலி

(கனகபுரம்)

டிப்பர் வாகனத்துடன் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி 55-ம் கட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வீதிப் புனரமைப்புக்காக ஒருபக்கப் பாதைப் பயணம் நடைபெற்றுக் கொண்டிருந்த மேற்குறித்த வீதியில், முறிகண்டியில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த டிப்பர் வாகனத்துடன் உருத்திரபுரம் எள்ளுக்காடு பகுதியில் இருந்து முறிகண்டி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகியது.

இச் சம்பவத்தில், உருத்திரபுரத்தைச் சேர்ந்த பச்சைமுத்து சுகந்தன் (வயது-37) என்ற வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சாரதியே சம்பவ இடத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.சம்பவம் தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-3, 259, 254)

# மரம் முறிந்ததில் வயோதிபர் மரணம்

வடமராட்சி புலோலி குரும்பசிட்டி வைரவர் ஆலயப் பகுதியில் ஆலமரம் முறிந்து விழுந்ததில் வயோதிபர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

புலோலி குரும்பசிட்டி வைரவர் ஆலயப் பகுதியில் சனசமூக நிலையமொன்றை புனரமைப்பதற்காக அருகில் நின்ற ஆலமரத்தை அப்பகுதி மக்கள் சிலர் தறித்துஅகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அவர்களுக்கு உதவுவதற்காக நின்ற வயோதிபரின் தலையில் தவறுதலாக மரம் முறிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் வயோதிபர் தலையில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு சிகிச்சை பலனளிக்காத நிலையில் அவர் நேற்றுக் காலை 9.30 மணியளவில் உயிரிழந்துள்ளார். இச் சம்பவத்தில் புலோலி வடமேற்கு தம்பசிட்டி பகுதியை சேர்ந்த இராசையா தபேந்திரன் (வயது 65) என்ற 7 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார். (அ-3-24)

# யாழ்.உயர் தொழில்நுட்ப மாணவர்கள் 174 பேருக்கு இன்று பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நடைபெறும் இலங்கை உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பட்டமளிப்பு வைபவத்தில் யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மாணவர்கள் 174 பேர் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பல்வேறு துறை ரீதியாக பட்டம் பெறுகின்றனர்.

இதில் உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா- HNDA பட்டத்தினை 88 பேரும், உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா - HNDM பட்டத்தினை 13 பேரும், உயர் தேசிய தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா - HNDIT பட்டத்தினை 31 பேரும், உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா- HNDE பட்டத்தினை 23 பேரும், உயர் தேசிய வியாபாரக்கற்கை டிப்ளோமா - HNDBS பட்டத்தினை 13 பேரும் பெறுகின்றனர்.

இன்று பட்டம் பெறுபவர்களினதும் மற்றும் நிறுவனம் தொடர்பான கற்கைநெறி தகவல்களையும் யாழ்ப்பாணம் உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்கத்தின் www.jatialumni.org என்ற இணையத் தளத்தின ஊடாகவும் அறிந்து கொள்ள முடியும் என பழைய மாணவர் சங்க செயலாளர் வி.தயாபரன் தெரிவித்துள்ளார். (ந-8)

# சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா

(நல்லூர்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர், மாற்றாற்றலுடையோர் தினவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் கோப்பாய் பிரதேச செயலர் க.கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஆ.ஞானவேல், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் வே.தபேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் லயன்ஸ் கழக தலைவர் டாக்டர் எஸ்.குணதாசன், அச்சுவேலி லயன்ஸ் கழக தலைவர் க.ஶ்ரீஸ்கந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்வில் மாணவர்கள், மாற்றாற்றலுடையோர், முதியோர் ஆகியோரின் கலைநிகழ்வுகள் இடம் பெறவுள்ளன. (அ-3-134)

# வட மாகாணத்தின் கல்வி அழிவுறும் அபாயம்! இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தின் கல்வியைத் திட்டமிட்டு அழிப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வட மாகாண தாய்ச் சங்க, பிரதேச, பிராந்திய செயலாளர்கள் கலந்து கொண்ட அவசர ஒன்றுகூடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட மாகாணத்தின் கல்வியில் ஏற்பட்டுள்ள பல்வேறுவிதமாக நெருக்கடிகள் குறித்து அவசர ஒன்றுகூடல் கடந்த 05.10.2012 அன்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் தத்தமது பிரதேசம் சார்ந்த பல்வேறு குறைபாடுகளை வெளிப்படுத்தியிருந்தனர்.

வட மாகாண கல்வி அமைச்சு துறைசார்ந்த எவருடனும் கலந்து ஆலோசிக்காமல் எடுக்கின்ற முடிபுகளால் மாகாணத்தினுடைய கல்வி மேலும் வீழ்ச்சியடையும் என அதிர்ச்சி வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்கெனவே வட மாகாணம் இலங்கையில் கடைசி இடத்தில் உள்ளது. இதனை உணர்வுபூர்வமாக உணர்ந்து கொள்ளாத அதிகாரிகள் பய உணர்வோடு யார் அதிகாரத்தில் பெரியவரோ அவரின் சொல்லுக்கு கட்டுப்பட்டு பொருத்தமில்லாத செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சிப்பது ஒட்டுமொத்தமாக வட மாகாணத்தின் கல்வியை அழிக்கும் செயலாகும்.

இலங்கையிலேயே முன்னிலை வகித்த வட மாகாணம் சமாதான, சாதகமான சூழ்நிலைக்கு பின்னர் பின்தள்ளப்படுவது வேதனை தருகின்ற விடயம் என்பதைவிட எல்லோரும் விழிப்படைய வேண்டிய விடயமென்று சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

மாணவர்களின் நிறைவேற்றப்படாத பல அத்தியாவசியத் தேவைகள், கல்வி அதிகாரிகள் மீது கொள்கின்ற காழ்ப்புணர்வுகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மீது செலுத்துகின்ற அதிகார துஷ்பிரயோகம், குற்றவாளிகள் என இனம் காண முன்னர் தண்டனை வழங்குதல், தண்டனை வழங்க வேண்டியவர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்குதல், சுயமான கற்றல் கற்பித்தலுக்கு இடையூறாக இருத்தல், அதிபர், ஆசிரியர்களின் பதவி உயர்வுகளைத் தாமதப்படுத்துதல், தடுத்தல், ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை உரிய காலங்களில் வழங்காது தாமதப்படுத்தல், தமக்கு வேண்டிய வகையில் பாடசாலைகளை வகைப்படுத்தல், இவற்றை விட இன்னும் பல குறைபாடுகளைச் சுட்டிக் காட்டிய செயலாளர்கள் இவை அனைத்தும் வட மாகாண கல்வி அமைச்சின் குறைபாடுகளா? அல்லது திட்டமிட்ட செயல்களா? எனவும் கேள்வி எழுப்பி, இதனால் எதிர்வரும் காலங்களில் இதன் தாக்கங்கள் பாரதூரமான பின் விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றன எனவும் எச்சரித்தனர்.

இது தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசியர் சங்கம் இனிமேலும் கரிசனை கொள்ளாதிருக்க முடியாதென்று ஏகமனதாகத் தீர்மானித்து, வட மாகாண கல்வி அமைச்சிற்கு எதிராக தொழிற் சங்க ரீதியிலான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ந)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## உன்னைப் பற்றியே சிந்திக்காதே!



சமநிலையில் இருந்து பிறழாதவன், மனசாந்தமுடையவன், இரக்கமும் கருணையும் கொண்டவன் ஆகியோர் நல்ல பணிகளை மட்டும் வாழ்வில் செய்ய முற்படுவர். அதன்மூலம் அவன் தனக்கே நன்மையைத் தேடிக்கொள்கிறான்.

தீமையைச் செய்வதால் நமக்குநாமே தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதால் நமக்கு நாமே நன்மை தேடிக்கொண்டவர்களாகிறோம்.

சித்தாந்தங்களையும் தத்துவங்களையும் தெரிந்து கொள்வதால் என்ன நன்மை விளையப் போகிறது. நல்லவர்களாக வாழுங்கள். மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்வைப் பயனுடையதாக்குங்கள்.

சுயநல எண்ணம் சிறிதும் இல்லாமல் பணம், புகழ் என்னும் எதிர்பார்ப்பு வைக்காமல் பிறருக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காகவே ஒருவன் தொண்டு செய்தால் உலகத்தையே மாற்றி அமைக்கும் சக்தி அவனிடமிருந்து வெளிப்படும்.

நம்மைப் பற்றியே சிந்தித்துக்கொண்டேயிருப்பது சுயநலங்களிலேயே மிகப்பெரிய பாவமாகும். சுயநல எண்ணம் எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுக்கு ஒருவன் கடவுளை நெருங்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளிநொச்சி மகா வித்தியாலயம் வெற்றி



கிளிநொச்சி மகா வித்தியாலய அணிக்கும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணி 68 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மகா வித்தியாலய அணியினர் முதலில் துடுப்பாட்டத்தை தீர் மானித்தனர். அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணியினர் யதுர்ஷனின் அதிரடியான சதத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர் களில் 8 விக்கெட்டினை இழந்து 260 ஓட்டத்தினை பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக கோ. யதுர்ஷன் 71 பந்துகளில் 18 நான்குகள் உட்பட 123 ஓட்டத்தினையும் இ.பேபிசன் 31 பந்துகளில் 7 நான்கு ஓட்டம் ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 45 ஓட்டங்களையும் ஜெ.கஜீபன் 39 பந்துகளில் 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 19 ஓட்ட ங்களையும் கிருஷ்ண துஷாந்தன் 46 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 22 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் சார்பாக நிலன் 2 விக்கெட்டினையும் தர்சிகன் 3 விக்கெட்டினையும் றனோஜன் 3 விக்கெட்டுக்களையும் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் 34.1 ஓவர்களில் 192 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. துடுப்பாட்டத்தில் துஸ்மிகாந் 37 ஓட்டங்களையும் தர்சிகன் 20, வினுசன் 16, கற்சன் 44 ஓட்டங்களையும் பெற்றனர். கிளி.ம.வி சார்பாக பந்து வீச்சில் ர.ரஜீவன் 4, ஜெ.கஜீவன், கோ.யதுர்ஷன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# வல்வை அணி வெற்றி

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த செவ்வாய் க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சிவானந்தா அணியை வென்றது வல்வை அணி.

இந்த ஆட்டத்தில் சிவானந்தா விளை யாட்டுக் கழக அணிக்கு தன்னை எதிர்த்து விளையாடிய வல்வை அணியின் அபார ஆட்டத்துக்கு முன்னால் ஈடுகொடுக்க முடிய வில்லை.

இதனால் ஆட்ட நேர நிறைவில் வல்வை விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# தேசியமட்ட மெய்வன்மை போட்டி இன்று ஆரம்பம்

இலங்கை கல்வி அமைச்சினால் பாடசாலை அணிகளுக்கிடையே நடத்தப்படும் தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டிகளின் நான்காவது கட்டப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் 13 ஆம் திகதி வரை அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானத்தில் நடை பெறவுள்ளது.மேற்படி மெய்வன்மைப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வடமாகாண அணிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அம்பாந்தோட்டை சென்றுள்ளனர். யாழ். மாவட்டத்தில் இருந்து சுமார் 250 க்கு மேற்பட்ட வீர வீராங்கனைகள் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த வீர வீராங் கனைகள் உட்பட வடமாகாணத்தைச் சேர்ந்த சுமார் 400 பேர் வரை தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டி களில் பங்குபற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொக்குவில் இந்திராவை வீழ்த்தியது அரசடி றெஜின்போ

அரசடி றெஜின்போ விளையாட்டுக் கழகத் திற்கும் கொக்குவில் இந்திரா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை பத்து மணிக்கு இடம்பெற்றது. இப்போட்டியில் றெஜின்போ விளையாட்டுக்கழகம் 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற றெஜி ன்போ விளையாட்டுக் கழகம் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திரா விளையாட்டுக்கழகம் 33 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 146 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் அவ் அணிசார்பாக சிவாஸ் அதிகபட்சமாக 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 38 ஓட்டத்தினையும் சஞ்சித் ஒரு 4 ஓட்டம், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 14 ஓட்டத்தினையும் காண்டீபன் 2 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 11 ஓட்டத்தினையும் பெற்றனர்.

பந்துவீச்சில் றெஜின்போ விளையாட்டுக் கழகம் சார்பில் மயூரன் 9.2 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 30 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டினையும் செந்தூரன் 5 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 17 ஓட்டத்தினை விட்டுக் கொடுத்து2 விக் கெட்டினையும் டார்வின் 6 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 25 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் சௌமி தரன் 6 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 16 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

147 ஓட்டத்தினை பெற்றால் வெற்றி என பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றெஜின்போ விளையாட்டுக்கழகம் அவ் இலக்கினை 16 ஓவர்கள் 4 விக்கெட்டினை இழந்து பெற்றுக் கொண்டது. அவ் அணி சார்பில் துடுப்பாட்டத்தில் டார்வின் 7 நான்கு ஓட்டங்கள், 2 ஆறு ஓட்டம் அடங்கலாக 71 ஓட்டத்தினையும் திலீப் 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 38 ஓட்டத்தினையும் விஷ்ணு 2 நான்கு ஓட்டம் அடங்கலாக 10 ஓட்டத்தினைப் பெற்றுக் கொண்டார்.

பந்துவீச்சில் சுரேந்திரன் 5 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டி னையும் காண்டீபன் 4.3 ஓவர்கள் பந்துவீசி 37 ஓட்டத்தினை கொடுத்து ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். (3)





உலக ஆசிரியர் தினத்தையொட்டி வடமராட்சி வலய ஆசிரியர்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி அண்மையில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் சம்பியனாகிய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆசிரிய அணியினரையும் இரண்டாம் இடத்தைப் பெற்ற நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய அணியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ். செல்வதீபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப் போரில் இருதரப்...

இது தொடர்பில் அவர் பி.பி.சி. தமிழோசைக்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் சமாதானத்துக்காக முன் முயற்சி எடுத்த கொடை நாடுகளான ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் இணைந்து 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு யோசனை முன் வைத்தன.

ஐ.நா. மன்றமும் இதன் பின்னணியில் இருந்தது. அன்றைய நிலைமையில் போரின் முடிபு இலங்கை அரசுக்கு இராணுவ ரீதியிலான வெற்றியாக அமையும் என்பது எல்லோருக்கும் தெரிந்த நிலையில், போரின் முடிபில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படும் பேரழிவை தடுக்கும் வகையில் போரை முறையாக முடிபுக்குக் கொண்டு வரவேண்டும் என்கிற யோசனையை நாங்கள் முன்வைத்தோம். அந்த திட்டத்தின் முழுமையான இறுதி வடிவமும் விடுதலைப்புலிகளும் இலங்கை அரசும் ஒப்புக்கொண்ட பிறகுதான் முடிபு செய்யப்பட்டிருக்கும். ஆனால் அதற்கு அடிப்படையாக நாங்கள் தெரிவித்த நடைமுறை யோசனை என்னவென்றால், சர்வதேச அமைப்பு உதாரணமாக அமெரிக்கா, இந்தியா அல்லது வேறு ஒரு நாடு இலங்கையின் வடக்குக் கிழக்கு பகுதிக்கு ஒரு பெரிய கப்பலை அனுப்பி வைப்பது என்றும், அதில் ஐ.நா.மன்ற அதிகாரிகளோ அல்லது மற்ற சர்வதேச அமைப்பைச் சேந்தவர்களோ இருந்து, போரின் இறுதியில் எஞ்சியிருந்த அனைத்து விடுதலைப்புலிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் ஒருவர் விடாமல் கணக்கெடுத்து புகைப்படத்துடன் பதிவு செய்வதென்றும் தெரிவித்திருந்தோம்.

அவர்கள் அனைவரும் கொழும்பு கொண்டு செல்லப்பட்டு அவர்களிடமிருந்த ஆயுதங்களை ஒப்படைத்தப் பிறகு, விடுதலைப்புலிகளின் அமைப்பின் தலைவர் பிராபாகரன் மற்றும் பொட்டு அம்மன் ஆகிய இருவர் தவிர்ந்த மற்ற அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அப்படி நடந்திருந்தால், சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் சர்வதேச அமைப்புகளால் பதிவு செய்யப்பட்டவர்களை இலங்கை அரசால் நினைத்த மாத்திரத்தில் கொல்ல முடிந்திருக்காது. எங்களின் இந்த யோசனை மட்டும் ஏறகப்பட்டிருந்தால், இறுதிக்கட்டத்தில் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பேர் இன்று நம்மிடையே உயிருடன் இருந்திருப்பார்கள்.

ஏப்ரல் மாதம் இந்தத் திட்டத்தின் இறுதி வடிவத்தை முடிபு செய்வதற்காக விடுதலைப்புலிகள் அமைப்பின் சர்வதேச பேச்சாளர் குமரன் பத்மநாதன் ஒஸ்லோவுக்கு வருவதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் கடைசி நிமிடத்தில் பிரபாகரன் அவரைத் தடுத்துவிட்டார். எங்களின் பாதுகாப்பு அதிகாரிகள் அவரை பத்திரமாக அழைத்து வருவதற்காக கோலாலம்பூருக்கே சென்றிருந்தனர். ஆனால் இந்த திட்டம் தங்களுக்கு ஏற்புடையதல்ல என்று எங்களுக்கு செய்தி சொல்லப்பட்டது. எங்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை.

இந்த திட்டத்திற்கு இலங்கை அரசின் ஒப்புதல் இருந்ததா? என்ற கேள்விற்கு பதிலளித்த சொல்ஹெய்ம், அந்த நாட்களில் நான் இலங்கைக்குச் செல்லவில்லை. ஆனால் ஒஸ்லோவிலிருக்கும் இலங்கை தூதரகம் மூலமாகவும் மற்ற தூதரகங்கள் மூலமாகவும் இலங்கை அரச தரப்புடன் எங்களுக்கு இருந்த தொடர்புகள் மூலமாகவும் இலங்கை அரசுடன் நாங்கள் நிறைய பேச்சுவார்த்தைகள் நடத்தினோம்.

அவர்களுடன் பேசியதிலிருந்து முழுமையான இராணுவ ரீதியிலான வெற்றியை பெறுவதே இலங்கை அரசின் பெரும்பாலானவர்கள் விரும்புகிறார்கள் என்கிற உணர்வையே நாங்கள் பெற்றோம்.

அதேசமயம் விடுதலைப் புலிகள் இந்தத் திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியிருந்தால் இலங்கை அரசுக்கு அதற்கு சம்மதிப்பதைத் தவிர வேறு வழியிருந்திருக்காது என்றே எங்களுக்குத் தோன்றியது.

இந்தத்திட்டத்திற்கு இலங்கை அரசு ஒப்புக் கொண்டிருக்கும் என்று எதை வைத்து நீங்கள் நம்புறீர்கள் என்ற கேள்விற்கு பதிலளித்த அவர்,

அவர்களுக்கு எதில் விரும்பம் இருக்கிறதோ இல்லையோ, அவர்கள் இதை ஏற்றுக் கொண்டிருக்க வேண்டிய நிலைமையே இருந்தது. காரணம் இந்தியாவும் அமெரிக்காவும் மற்றவர்களும் இதில் உறுதிகாட்டியிருப்பார்கள், ஒட்டுமொத்த சர்வதேச சமூகத்தினரும் இதில் ஒன்றாகவும் உறுதியாகவும் குரல் கொடுத்திருப்பார்கள்.

இலங்கை அரசில் தயக்கம் இருந்திருந்தாலும் அவர்களுக்கு வேறு வழியிருந்திருக்காது என்றார். (ந-11)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18
01
1925

மறைவு
21
09
2011

அமரர் நாகன் வேலுப்பிள்ளை

திதி - 09.10.2012

இன்று நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

38/4 ஆசிர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.
-குடும்பத்தினர்

(702)



## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
09
03
1990

இறப்பு
07
10
2012



சிவஞானசுந்தரம் கணேஸ்வரன்
வேலியந்தோட்டம், வல்வெட்டித்துறை

அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செவிப்புலன் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனம்
16/2 சீனியர் டூலன், கலட்டி, யாழ்ப்பாணம்.

தலைவர், செயலாளர், பொருளாளர்,
உறுப்பினர்கள்.

(713)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி.ர.கருணானந்தன்
(Bed, S.L.T.S. 2-II)

திரு.இ.நாகேந்திரன்
(Dip.in.Ed, B.A, S.L.P.S.2-II)

ஜனாதிபதி மாளிகையில் (02.10.2012) அன்று இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2 தரம் II ற்கு நியமனம் பெற்றுக் கொண்ட எமது பாடசாலையின் ஆசிரியர் திரு. இ.நாகேந்திரன் (Dip.in.Ed, B.A, S.L.P.S.2-II) அவர்களையும் அத்துடன் இவ் ஆண்டுக்கான நல்லாசிரியர் விருதினை (பிரதீபா பிரபா-2012) இன்று 09.10.2012 பெற்றுக்கொள்ளும் திருமதி. ர.கருணானந்தன் (Bed, S.L.T.S. 2-II) அவர்களையும் எமது பாடசாலைச் சமூகம் மனமார வாழ்த்திப் பாராட்டி நிற்கின்றது.

(712)

வாழ்த்துவோர் : அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
கிளி/முருகானந்த ஆரம்ப வித்தியாலயம், முரசுமோட்டை.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### இ.சதாசிவம்



இன்று 09.10.2012-ல் மீபே கல்வி அபிவிருத்தி நிலையத்தில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் 'பிரதீபாபிரபா' நல்லாசிரியர் விருது வழங்கி கௌரவிக்கப்படுகின்ற எமது பாடசாலையின் சிரேஷ்ட தமிழ் ஆசிரியர் இ.சதாசிவம் அவர்களை உலமார பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :-
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க. பாடசாலை

(சி-1256)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி மஞ்சுளாதேவி தங்கவேலாயுதம்
(S.L.T.S. 2-I. Agriculture Spe.Trd)

எமது பாடசாலையில் விவசாய ஆசிரியராகப் பணிபுரியும் செல்வி மஞ்சுளாதேவி தங்கவேலாயுதம் அவர்கள் இன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் குரு பிரதீபா பிரபா விருது பெற்றமையையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச்சங்கம்
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.

(சி-1255)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.சுப்பிரமணியம் நடராசா
அதிபர் கிளி/அழகாபுரி வித்தியாலயம்



திரு.சபரி புலோகராசா
அதிபர் கிளி/தருபுரம் மகா வித்தியாலயம்



திரு.ஞானப்பிரகாசம் ரவிக்குமார்
அதிபர் கிளி/இயக்கச்சி அ.த.க. பாடசாலை

### அதிபர் பிரதீபா பிரபா விருது 2012



திருமதி.ஜெயந்தி தனபாலசிங்கம்
அதிபர் கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி

கிளிநொச்சி மாவட்டம்

இன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் விருதளித்து கௌரவிக்கப்படும் எமது மாவட்ட சிறந்த அதிபர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர் சங்கம் - கிளிநொச்சி

(சி-1257)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் தேசிய பாதுகாப்பு...

றப்படவில்லை. சுமார் 37 ஆயிரம் குடும்பங்கள் இந்தப் பகுதியில் மீள்குடியேற காத்துநிற்கின்றன.

இதுதவிர மூன்று இலட்சம் மக்கள் இன்னும் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளனர். இவர்கள் இந்தியாவிலும் ஏனைய வெளிநாடுகளிலும் தங்கியிருப்பதோடு நாட்டுக்குள்ளேயே தமது சொந்த இடங்களுக்கு செல்ல முடியாத நிலையில் உறவினர்களினதும் நண்பர்களினதும் வீட்டில் தங்கியுள்ளனர்.

மேலும் இந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த வேண்டும் எனக்கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததன் பிரகாரம் உயர் நீதி மன்றம் மக்களை மீள்குடியேற்றுமாறு இடைக்கால உத்தரவு போட்டது. இருந்தும் நிறை வேற்றப்படவில்லை.

இந்த மக்கள் மீள்குடியேற்றப்படாததற்கு யார் காரணம் இராணுவம் அந்தப்பிரதேசத்தை ஆக்கிரமித்ததேயாகும்.

எனவே இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும். இடம்பெயர்ந்த மக்கள் அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் தலையிட வேண்டும். காணிகளிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்.

வலிகாமம் பகுதியில் 20 ஏக்கர் காணியை இராணுவம் படைமுகாம் அமைப்பதற்காக துப்புரவு செய்கின்றது.

திருநெல்வேலியில் நல்லூர் பிரதேசசபைக்குச் சொந்தமான காணியை இராணுவம் அடாத்தாக அபகரித்துள்ளது.

அத்தோடு மாதகல், கோப்பாய் போன்ற பகுதிகளில் உள்ள முகாம்களில் மக்கள் தனியார் காணிகளில் உள்ளனர்.

அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு உரிமையாளர்கள் தெரிவித்தால் அவர்கள் எங்கே போவார்கள். எனவே மக்கள் இல்லாத மண்ணிற்கு ஏன் தேசிய பாதுகாப்பு?. பாதுகாப்புமக்களுக்காகத்தான் என்பதைபுரிந்துகொண்டு இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வேண்டும். இராணும்வம் வெளியேற்றப்பட வேண்டும்.

இராணுவ முகாம் ஒன்று கிராமத்திலிருந்தால் மக்களுக்கும் இராணுவத்திற்கும் இடையில் முறுகல் ஏற்படும் என அவர் தெரி வித்தார்.

இவ்வாறு கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீள்குடியேற்றம், இராணுவ வெளியேற்றத்தினை நேற்றைய கூட்டத்தில் வலியுறுத்தினர். (ந-6)

# டக்ளஸ்-மாவை...

மீள்குடியேற்றம் மற்றும் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற காணி சுவீகரிப்பு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் மாவை எம்.பி தொடர்ந்து கருத்து தெரிவித்துக் கொண்டிருந்த போது, குறுக்கிட்ட அமைச்சர் டக்ளஸ், நான்தான் இந்தக் குழுவின் தலைவர். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள் கருத்தைக் கூறுங்கள். இல்லையென்றால் உங்களை பேசவிடாமல் ஒலி வாங்கியை முடக்கிவிடுவேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்குபதிலளித்த மாவை எம்.பி., நீங்கள் ஒலிவாங்கியை முடக்கினாலும் நான் தொடர்ந்து உரையாற்றுவேன் எனக் கூறி விட்டு தனது உரையை முடித்துக்கொண்டார். (ந-11)

# காணிகளை இராணு...

தொடர்பாக கூட்டமைப்பினர் கேள்வி எழுப்பியதோடு தமது அதிருப்தியையும் வெளிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து கருத்துக் கூறிய போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அத்தோடு குறித்த காணி விவகாரம் தொடர்பில் தனக்கு அறிக்கை ஒன்றினைச் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டார். (ந-6)

# இலங்.இராணு...

மேற்படி மனுவைத் தள்ளுபடி செய்யும் ஆணையைப் பிறப்பித்தது.

அத்துடன், இந்திய அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் தலையிட இயலாது எனவும், உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது. (ந-11)

# இரா. தளபதி...

கண்டித்தும் கோஷங்களை எழுப்பினர்.

இப்போராட்டத்தில் மக்கள் உரிமைக் கூட்டமைப்பு, செந்தமிழ் இயக்க அமைப்பு, இந்திய ஜனநாயக் கட்சி, முற்போக்கு ஜனசக்தி இயக்கம், மனித உரிமைகள் பாதுகாப்புக் கழகம் ஆகியன கலந்து கொண்டன.

இதன்போது இப்போராட்டத்தில் பங்கேற்ற 30 பேரை பெரியக்கடை பொலிஸார் கைது செய்தனர். (ந-11)

துரித மீட்டலும்
வினா-விடை வகுப்பும்
A/L -2013 LOGIC
எஸ்.எஸ்.மனோகரன்
ஆரம்பம்: 10.10.2012 புதன் 4.00 மணி
❀ புதிதாகத் தோற்றும் மாணவர்களுக்கும், ஏற்கெனவே தோற்றிய மாணவர்களுக்கும் உரியது.
BEACON
வெலிங்டன் சந்தி, யாழ்.நகர்.
(596)

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திங்கள் ஒன்று சென்றதுவோ
திருமுகம் மறைந்ததன் பின்,
அனவரதம் வாடுகின்றோம்
ஆறுதல் அடையாமல்
மனிதத்தின் மாண்புருவே
மகிழ்க, அரன் அடியின் கீழ்

## அமரர் காசிலிங்கம் கதிர்வேல்

எமது குலதெய்வம் அமரர் காசிலிங்கம் கதிர்வேல் அவர்கள் காலமான செய்தி கேட்டு, உடனிருந்து ஆறுதல் அளித்தோர், இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோர், மலர்வளையம் சாத்தியோர், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தோர், தொலைபேசி, தொலைநகல் மூலம் துயர் பகிர்ந்தோர் அனைவர்க்கும் எமது மனமார்ந்த நன்றியினைச் சமர்ப்பிக்கின்றோம்.

இன்று (09.10.2012) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல 67/21, பிஸ்கால் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.

(705)

சவுதி அரேபியாவில் உடனடி வேலைவாய்ப்பு
வடபுலத்தில் வாழும் இளைஞர்களே! இதோ உங்களுக்காக அதிஉயர் சம்பளத்துடன் கீழ்வரும் வேலை வாய்ப்புக்கள் உடனடியாக காத்திருக்கின்றன.
ஸ்பிரே பெய்ன்டர் (Auto) | மெக்கானிக் (Diesel/Petrol)
டின்கர் (Tinker) | மேசன் (mason)
வெல்டர்(welder) | மெக்கானிக் எல்பர்ஸ் mechanical helpers
இலக்ரீசியன் (Electrician)
கட்டார் நாட்டிலும் வெல்டர் தேவை
(ஒரு மாதத்தில் பயணம்)
விரையுங்கள் இரண்டே வாரத்தில் பயணம்
(தங்குமிடம் மருத்துவம் இலவசம்)
Lanka Voice 24, Station Road, vavuniya.
0750650084
(C-1243)

வடமராட்சியில்...
3வது பிரிவு ஆரம்பம் -10.10.2012 (3 pm)
SPOKEN ENGLISH WITH GRAMMAR

பிரபல ஆசிரியர்
B.Jyothy
OXFORD ENGLISH ACADEMY
P.K.Lane Point pedro
TP:- 0776689066
(அனுமதிக்கு முந்துங்கள்)
(C-1250)

YOGIS Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science

EXHIBITION
Cake and Sugar Craft Sponsored By
Pettah Essence Suppliers
19,Dam street , Colombo 12, 104, Hospital Road, Jaffna.

கேக் கண்காட்சி 11.10.2012
யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர்
Prof. வசந்தி அரசரட்ணம்
அவர்களால் ஆரம்பிக்கப்படவுள்ளது.
திருமண கேக் அலங்காரங்கள் பிறந்தநாள் கேக் அலங்காரங்கள் ஐசிங் பூக்களின் அலங்காரங்கள்
இன்னும் வித்தியாசமான கேக்களின் அலங்காரக் கண்காட்சி 11-ம் திகதி வியாழக்கிழமை மதியம் 12 மணிக்கு ஆரம்பமாகி 12, 13, 14, 15-ம் திகதி வரை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும்.
நடைபெறும் இடம்:-
75, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர் வீரமாகாளி அம்மன் ஆலயம் முன்பாக)
(C-1249)

## மரண அறிவித்தல்

### ஞானசுந்தரம் அமிர்தாம்பாள்



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானசுந்தரம் அமிர்தாம்பாள் அவர்கள் 08.10.2012 நேற்றுத் திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு-சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா-சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், சந்திரகுமார், காலஞ்சென்ற ஜெயக்குமார், வசந்தி ஆகியோரின் பாசமிகு தயாரும், குமாரலிங்கத்தின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

100/5, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-1259)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org